www.tamilarangam.net







# சுவடுகள்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE , FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ØSTREHAUSMGATA 5
OSLO

| | Aerofloat | Air Lanka | Air India |
|---|---|---|---|
| Colombo | 5 600,- | 6 550,- | |
| Singapore | 5 600,- | | 7 350,- |
| Madras | | | 6 400,- |

GT
GOLDEN TRAVELS A/S

Tel.: 02/360290
Tel.: 02/362959
Tlx.: 79818 Gold N.

| | |
|---|---|
| Monday - Friday | 9.00 - 17.00 |
| Saturday | 10.00 - 13.00 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இங்கு அமைதி வேண்டி....

ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் ஒஸ்லோவில் நடந்த சில நிகழ்ச்சிகள் இங்குள்ள தமிழ் மக்களின் மனதில் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தின. ஓரளவாவது ஒற்றுமையாகவும், நல்லுறவுடனும் இங்கிருந்த தமிழ் மக்கள் குழுக்களாகப் பிளவுபட இச் சம்பவங்கள் வழிகோலின. கிறிங்சோ மாணவர் விடுதியில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவத்தில் ஆரம்பித்த, குழுக்களுக்கு இடையிலான இடைவெளி தொடர்ந்த சம்பவங்களால் மேலும் விரிந்தது. இந் நிலையை மேலும் தொடராது தடுக்கவும், தமிழர்களிடையே நல்லுறவை வளர்க்கவும் தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூட்டத்தின் காப்பாளரும், தமிழ் மக்களின் நலனில் மிக்க அக்கறை கொண்டவருமான வண. பிதா. ஸ்ரீக் உற்ளம் சில முயற்சிகளை எடுத்து வருகின்றார். இது தொடர்பாக அவரைச் சந்தித்து அவரது முயற்சிகள் பற்றிக் கேட்டோம்.



கேள்வி * கிறிங்சோ சம்பவம் கேள்விப்பட்ட போது உங்கள் மனநிலை எவ்வாறிருந்தது?

பதில் * மனம் வருந்தினேன். தமிழர்களின் தங்களுக்கு இடையேயான மோதல்கள் இலங்கையிலிருந்து ஏனைய நாடுகளுக்கும் பரவியது போன்று இங்கும் வந்து விட்டதாக உணர்ந்து கொண்டேன்.

தமிழர்கள் பழகுவதற்கு இனிமையானவர்கள், வேலைகளில் திறமையானவர்கள், நல்ல அயலவர்கள் என்றெல்லாம் தமிழர்களைப் பற்றி இந்நாட்டு மக்களிடையே நல்லெண்ணம் உள்ளது. கிறிங்சோ சம்பவத்திற்குப் பின் இவ்வாறான எண்ணம் நேரெதிர் விதமாக மாற்றப்படக் கூடியதாயிருந்தது.

சிங்கள அரசின் படைகளினாலோ, இந்திய அமைதிப் படையினாலோ துன்புறுத்தப்பட்டும், தமிழ்க் குழுக்களுக்கு இடையேயான மோதல்களாலும், வறுமையாலும், வேலை, பணம், நல்ல எதிர்காலம் எனவும் பல்வேறுபட்ட காரணங்களுக்காக இங்கு வந்த தமிழர்களை நான் சந்தித்திருக்கிறேன்.

உங்களிடையே பல்வேறுபட்ட பிரச்சனை இருந்த போதும் நான் இந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுபாடுகளுக்கு அப்பால் உங்களை நோர்வேக்கு வரவேற்கிறேன்.

உங்கள் அரசியல் பற்றி இங்கே விவாதிக்க சட்டம் அனுமதிக்கிறது. இந்த நாட்டவர்களுக்கு இது பற்றி எதுவித ஆட்சேபனையும் இல்லை. அதேவேளை இங்கு சில விடயங்கள் எல்லோராலும் மதிக்கப்படல் வேண்டும். அரசியற் பிரச்சனைகள் சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டும் அல்லது அப் பிரச்சனையை விவாதிப்பதை விடவேண்டும். அரசியற் காரணங்களுக்காக வன்முறையில் யாரும் இறங்குவதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் இங்கிருக்கும் காலங்களில் எமது இந்த எண்ணத்தை மதித்து நடக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

கேள்வி * இச் சம்பவத்தைக் கேள்விப் பட்டதும் என்ன செய்தீர்கள்?

பதில் * 'பி மிசன் சென்ரரு'டன் (BYMISJON SENTERET) தொடர்பானவர்களை தொடர்பு கொண்டு இதுபற்றி ஆலோசித்தேன். தமிழ் நோர்வே இணைவு கூடத்தினரும் இது பற்றி என்னுடன் பேசினர். இணைவு கூடத்தில் இதுபற்றிக் கலந்துரையாட நாம் அனைவரும் கூடினோம். எல்லோரும் இது பற்றி வருந்தியதோடு, தொடர்ந்து இவ்வாறான வன்செயல்கள் பரவாது தடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். வன்செயல்களைப் பரவாது தடுப்பதில் இணைவு கூடத்தின் யோசனை மிகவும் வரவேற்கப் பட்டது. ஏனெனில் அரசியல் வேறுபாடுகளை மறந்து தமிழர்கள் ஒன்று கூடும் இடமாகவே இணைவு கூடம் இயங்குகிறது.

தமிழர்கள் தமது எதிர்காலம் பற்றியும், அந்நியப் படைகள் வெளியேறுவது பற்றியும், தமது சுதந்திரம் பற்றியும் இணைவு கூடத்தில் கலந்துரையாடலாம். அமைப்பு வேறுபாடுகள் பற்றியது விரும்பத்தக்கதல்ல.

இந் நிலையில் இவ்வாறுன ஒரு அமைப்பு (இணைவுகூடம்) இயங்குவது பற்றி நான் மிக மகிழ்கிறேன். அதுவும் இந்த வேளை அது மிக முக்கியமானது. நோர்வே வாழ் தமிழர்கள் தங்கள் இடையேயான பிளவுகளைக் களைந்து ஒற்றுமையை மீளக் கட்டியெழுப்புவதில் ஒரு கருவியாக இணைவுகூடம் பணியாற்ற வேண்டும் என்பது எனது விருப்பம். வேறொரு நாட்டில் வசிக்கும் போது இது சிரமமானது தான். வேறு பல வெளிநாட்டவர் இடையேயும் இது மாதிரியான பிரச்சினைகள் உள்ளன.

நாடு திரும்பும் போது தமிழர்கள், தம் நாட்டைக் கட்டி எழுப்புவதிலும், எல்லாக் குழுக்களையும் ஒற்றுமையாக்கி எதிர்காலத்தை வளமாக்குவதிலும் ஈடுபட வேண்டும். இப்பணிகள் வெளிநாட்டில் இருக்கும் போதே ஆரம்பிக்கப்பட்டால் மிக நல்லது. இணைவு கூடம் ஒரு துளியளவிலாவது இப்பணியை ஆரம்பித்து இருப்பதாகவே நான் எண்ணுகிறேன்.

கேள்வி * தற்போது தமிழர்களிடையே மேலும் பிளவு ஏற்படாது இருக்கவும் ஒற்றுமை ஏற்படவும் நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் யார் யாருடன் தொடர்பு கொண்டுள்ளீர்கள்?

பதில் * இது தொடர்பாக நான் தொடர்ச்சியாகப் பலரைத் தொடர்பு கொண்டு வருகிறேன். நான் தொடர்பு கொண்டவர்கள் பற்றியோ பேசியது பற்றியோ எதுவித விபரமும் வெளியிடுவது இப்போது பொருத்தமாக இருக்காது என

www.tamilarangam.net

பாடலாசிரியர்:- கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

எரியும் அன்னை மண்ணிலே- எங்கள்
நனவுகள் தொலைந்தன
இளமை கனவுகள் துருவத்து
பனியில் புதைந்தன
இயேசுநாதரே- நாமும்
பாரம் சுமக்கிறோம்
அடிமை விலங்குகள்- உடைக்க
உம்மை அழைக்கிறோம்

ஓர் மாட்டிடையன் குடிசையிலே
ஊருறங்கும் வேளையிலே
உதித்துவந்த சூரியனே
நம் நம்பிக்கை தகர்கையிலே
தட்டுங்கள் திறக்கப்படும்
என்ற தத்துவத்தின் நாயகனே
சிலுவைகளில் அறைந்தாலும்
தர்மத்துக்கு என்றும் மரணமில்லை

நினைக்கிறேன்.

கேள்வி * இம் முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது?

பதில் * இதற்குப் பதில் சொல்லக் காலம் இருக்கிறது. இது மிகச் சிரமமான முயற்சி. இது தொடர்பாக நான் யதார்த்த பூர்வமாக இருக்கவே விரும்புகிறேன். அதே வேளை இத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் இவை தொடர்பாக ஆலோசிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

கேள்வி * இச் சம்பவம் தொடர்பாக நோர்வே நாட்டவர்கள் தமிழர் பற்றி என்ன விதமான எண்ணம் கொண்டுள்ளனர்?

பதில் * இது முக்கிய விடயம். பிரச்சனைகளை ஏற்படுத்துவோர் மிக மிக்க் குறைவான எண்ணிக்கை உடையோரே. ஏனைய தமிழர்கள் அமைதியை விரும்புபவர்கள், இவ்வாறன பிரச்சனைகனை விரும்பாதவர்கள் என்றெல்லாம் தமிழர்களுடன் நேரடியாகப் பழகிய நோர்வே நாட்டவர் புரிந்து கொண்டிருப்பர். தமிழர்களைப் பற்றி அறிந்த நோர்வே நாட்டவரும் தாம் செல்லும் இடங்களில்- பாடசாலை, வேலைத்தளங்கள்- உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவது அவசியம். அதற்கு நாமும் முயன்று வருகிறோம்.

கேள்வி * சுவடுகள் வாசகர்கள் இது தொடர்பாக ஏதாவது ஆக்கபூர்வமாகச் செய்ய முடியும் என நம்புகிறீர்களா?

பதில் * ஆம். நெருக்கடியான இந்த நிலையைத் தளர்த்த ஒவ்வொரு வாசகரும் தம்மால் இயன்ற வரை முயல வேண்டும். இது தொடர்பாக சுவடுகள் என்னைத் தேடி வந்தது மகிழ்வு தருகிறது. இவ்வாறு சுவடுகள் வந்தமையால் தான் எனது எண்ணங்களை இங்கு வாழும் தமிழர்களிடம் வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நிலைமையைச் சீராக்க என்ன செய்யலாம் என்பது பற்றி எல்லோரது ஆலோசனைகளும் எனக்கு அவசியம். தொலைபேசி மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ, நேரிலோ என்னுடன் தொடர்பு கொண்டு தமது எண்ணங்கள் பற்றிக் கூறலாம். அத்துடன் நோர்வேயில் எந்த விதமான வன்செயலிலும் ஈடுபட மாட்டேன் என்ற உறுதியை ஒவ்வொரு தமிழர்களும் எடுப்பது அவசியம் என்று கருதுகிறேன்.

தொகுப்பு கேசவன்

www.tamilarangam.net


## பிறந்த நாள் விழாக்களா?

## கலை நிகழ்ச்சிகளா?

## திருமண வைபவங்களா?

ஒரே நாளில் முடிந்துவிடும் இந்த நிகழ்ச்சிகளை வாழ்நாள் முழுவதும் நினைவுகூர, இந்த நிகழ்ச்சிகளைத் தரமான முறையில் ஒளி, ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள்.

தரமான முறையில் ஒளி, ஒலிப் பதிவுடன் சிறந்த முறையில் வீடியோப் படப்பிடிப்பு மேற்கொள்ள நோர்வேயின் எல்லாப் பகுதிகளில் உள்ளோரும் நினைவில் வைத்திருக்கவேண்டிய ஒரே இடம்.

**THANGAM VIDEO VISION,**

**S.JEGANATHAN,**
**LUTVANNS VEIEN,33,**
**0676,OSLO 6**

தொலைபேசி இலக்கம் 02/325504
திருமண வைபவங்களுக்குத் தேவையான மணவறை, அலங்காரப் பொருட்கள் யாவும் குறைந்த வாடகைக்கு வழங்கப்படும்.

அழகான முறையில் திருமணப் பத்திரிகைகள் அச்சடிக்க எங்களை நாடுங்கள்.

***** தங்கம் வீடியோ விஸன் *****
**நோர்வே**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

அரசியல் மாற்றங்கள் பொதுவாக சடுதியாக நிகழ்வதில்லை. அவை திடீரென நிகழ்வது போலத் தோன்றினாலும் அவற்றின் பின்னணி நீண்ட கால வரலாற்றைக் கொண்டிருக்கும். இந்திய உபகண்டத்தில் அண்மையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் இத்தகையவே.

கடந்த இரு வருடங்களில் இந்தப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பல உண்மைகளை வெளியே கொண்டுவந்தன. இந்தியாவின் பிராந்திய வல்லரசுக் கனவுகள் வெளிப்படையாகத் தெரியும் நிலை வந்ததுடன், இதை எதிர்த்து சுற்றியுள்ள சிறு நாடுகள் யாவும் தமது எதிர்ப்பைக் காட்டின. இந்தியா தனது மேலாதிக்கத்தை அண்டை நாடுகளின் மீது திணிக்க எடுத்த எல்லா முயற்சிகளும் ஒரு வகையில் தோல்வியே கண்டன.

தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒப்பந்தம் எவ்வாறு எல்லாத் தரப்பினதும் எதிர்ப்பைச் சம்பாதித்ததோ, அவ்வாறே ஏறத்தாழ செயலிழந்தும் போய்விட்டது. எமது உரிமைப் போர் மீது இந்தியா செலுத்திய மேலாதிக்கம் உயிரிழப்புகளுக்குக் காரணமாக இருந்ததேயன்றி எமது விடுதலைக்கு நன்மை பயக்கவில்லை.

இந்த நிலையில் 'அமைதியை நிலைநாட்ட' வந்த இந்தியப் படைகள் விலகுவதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. படைவிலகல் பகுதி பகுதியாக நிறைவேற்றப்படுகிறது. படைவிலகல் முற்றுப்பெற்றால் என்ன நேரலாம் என்பதை விளக்குவதுபோல ஆங்காங்கே சில 'சம்பவங்கள்' நிகழ்ந்துள்ளன. இவை இத்தனைகாலத் துயரத்துக்குப் பின்னரும் நிலை மேலும் மோசமாகலாம் என்ற அபாயத்தையே மக்களிடம் சொல்கின்றன.

அம்பாறைப் பகுதியில் இலங்கை அரசு துணையுடன் விடுதலைப் புலிகளும், இந்திய அரசின் துணையுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ்.பினரும் ஒருவரோடொருவர் மோதியமை விடுதலை என்பது யாருக்காக என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இந்தியாவில் கிடைத்த தேர்தல் முடிவுகள் அங்குள்ள அரசியல் நிலையை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றன. தேர்தல் முடிவுகள், உள்நாட்டு நெருக்கடியைச் சிக்கலாக்கினால் இலங்கைப் பிரச்சனை இந்தியாவுக்கு இரண்டாம் பட்சப் பிரச்சனையாக மாறிவிடும். ஆனால், எமக்கு இதுவே முதல் பிரச்சனை. ஒவ்வொரு காலடியையும் மிக அவதானமாக எடுத்து வைக்காவிட்டால் பாதிக்கப்படுவது நாங்களே.

www.tamilarangam.net

இந்தியா எமது பிரச்சனையைத் தீர்க்கும் என்று எம்மில் பலர் கண்ட கனவு எவ்வாறு பொய் என்று நிரூபிக்கப்பட்டதோ, அவ்வாறே இந்தியப் பிரதமர் பதவியில் ஆள் மாறியது எமது விடுதலைக்கு ஒன்றையும் பெரிதாகச் சாதிக்காது என்பதும் நிரூபிக்கப்படும். இலங்கையில் எவ்வாறு சிங்கள அரசுகளை, அது ஐ.தே.க.வாயினும், சுதந்திரக் கட்சியாயினும் சரி, தமிழ் பேசும் மக்கள் நம்பமுடியாதோ அவ்வாறே இந்திய அரசையும் நாம் நம்பமுடியாது, நம்பக்கூடாது.

எம்மிடையே இன்றும் நிலவும் பிரிவினைகள் எமது விடுதலையை ஒருபோதும் தேடித் தரமாட்டா, பதிலாக எமது குருதியில் அன்னிய சக்திகள் சுகம் பெறவே உதவும்.

"நாங்கள் எந்த யுத்தத்திற்கும் திட்டமிடவில்லை நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம். இன்றைய நிலையைக் கணக்கிலெடுத்து வட,கிழக்கு மக்கள் தம்மைத் தாமே கொல்வதை நிறுத்தவேண்டும். அப்படி அவர்கள் அழிப்பு வேலையை மேற்கொண்டால் இப்பகுதிகளில் மிஞ்சப்போவது சிங்களவர்களும் முஸ்லிம்களும் மாத்திரமே" என இலங்கை ராணுவத் தளபதி ஹமில்ரன் வணசிங்க தமிழ்த் தலைவர்களிடம் கூறியுள்ளார். இதை யார் கவனத்தில் எடுப்பார்களோ தெரியவில்லை.

இன்று எமது தேசம் எதிர்காலம்பற்றி அவநம்பிக்கை ஊட்டப்பட்டிருக்கிறது. இதற்கு எமது கறை படிந்த கடந்த காலங்களும் ஒரு வகையில் காரணமே. எமது போராட்டம் புதிய தளத்துக்கு இட்டுச் செல்லப்படுவது அவசியம் எனில் அதற்கு எல்லோரது விட்டுக்கொடுப்பும், சில தியாகங்களும் அவசியமானவை. இது உயிரிழப்பின்றிச் சாதிக்கப்படுமெனில் அதுவே சகல அரசியல் சக்திகளும் மக்களுக்குச் செய்யக்கூடிய சிறந்த உதவியாயிருக்கும்.

ஏற்கனவே எமது தலைமுறையொன்று சிதறுண்டு போய்விட்டது. இன்னொரு தலைமுறையை வீதிகளில் இழக்கவோ, வேற்று நலன்களுக்குப் பலியிடவோ யாரும் ஆயத்தமாக இருக்கமாட்டார்கள். எதிர்கால நலனுக்காக இழப்புகளைத் தொடர்ந்து தாங்கும் எமது இனத்தின் விடிவுக்காக குறைந்தபட்ச அடிப்படையிலாவது ஒற்றுமை சாத்தியமாகுமா என்ற ஏக்கக் குரலுக்கு யார் செவிமடுக்கப் போகிறார்கள்?

இன்றைய சூழலின் தேவையுணர்ந்து உண்மையில் மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து ஒற்றுமைக்காக உழைக்க முன்வரும் அனைவரையும் பூரணகும்பம் வைத்து வரவேற்க மக்கள் காத்திருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெற்கின் 'இழப்பு'



இலங்கையின் வரலாற்றில் மத்திய அரசுக்கெதிராகப் பெரிய அளவில் ஆயுதந் தாங்கிய கிளர்ச்சியை நடாத்திய JVP தலைவர் ரோகண விஜயவீரா மரணமடைந்ததாக இலங்கையரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

1943இல் தங்காலையில் பிறந்த ரோகணவின் தந்தை கம்யூனிஸ்டாக இருந்தவர். எதிரிகளால் தாக்கப்பட்டு நிரந்தரமாகவே அவரது உடல் பாதிக்கப்பட்டது. இது ரோகணவை கம்யூனிஸ்டின் பக்கம் திருப்பியது. 1960இல் ரோகண மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் மருத்துவ புலமைப்பரிசில் பெற்றார். மாவோயிசத்தாலும் சேகுவாராவின் சிந்தனைகளாலும் கவரப்பட்ட ரோகண, JVPஐ நிறுவி அரசுக்கெதிரான கிளர்ச்சியை 1971 ஏப்ரல் 5இல் தொடங்கினார். இந்த கிளர்ச்சி இந்திய உதவியுடன் முறியடிக்கப் பட்டதோடு, 10,000 இளைஞர்களின் உயிரைக் குடித்தது. கிளர்ச்சியில் கைதாகி சிறையிலிருந்த ரோகண, ஐ.தே.க.அரசால் 77இல் விடுதலை செய்யப்பட்டார். 1982இல் ஜனாதிபதித் தேர்தலிலும் பங்கெடுத்தார். இனவாத ஐ.தே.க.அரசு, திட்டமிட்டு நடாத்திய 83 இனக் கலவரத்துக்கு JVPயே பொறுப்பு என்ற அரச குற்றச்சாட்டாலும், தடையாலும் தலைமறைவானார். ரோகண, 87இல் இந்தியப்படை வருகையுடன் மீண்டும் 'போராடத்'தொடங்கினார். தொடர்ச்சியாக வேலை நிறுத்தங்கள் மூலம் பலமுறை நாட்டை ஸ்தம்பிக்கச் செய்த JVP இராணுவ வீரர்களின் குடும்பங்களை அழிக்கத் தொடங்கியபோது அரசு 'பதில் நடவடிக்கை' எடுத்தது. இது மேலும் 10,000 பேரின் உயிரைக் குடித்தது. பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்தபோதும் JVPயின் பகிஷ்கரிப்பு பலரின் உயிரைப் பலியெடுத்தது. கடைசியாக பொருளாதார முக்கியம் வாய்ந்த இடங்களைத் தாக்கத் தொடங்கியது JVP. இலங்கை அரசு பலமுறை பேச்சு வார்த்தைக்கு அழைத்தும் பங்குபற்றலை மறுத்தது.

www.tamilarangam.net

மார்க்சிசக் கருத்துகளைப் பற்றிக் கொண்டதாக JVP கூறியபோதும் ஒருபோதும் தமிழ் பேசும் மக்கள் தொடர்பாக சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. தனிநாட்டுக் கோரிக்கை இந்திய விஸ்தரிப்புவாதமே என்று முத்திரை குத்தியது. JVPயின் போராட்டம் சரியாக நடாத்தப் பட்டிருப்பின் எமது போராட்டம் கூட சரியான வழிக்குச் செல்ல உதவியிருக்கலாம்.

நவம்பர் மாதம் கம்பளையிலுள்ள உலப்பனை என்னும் இடத்தில் படையினரின் தேடுதலின்போது ரேகண விஜயவீர என்று தன்னை அடையாளப்படுத்திய ஒருவர் கைதானதாகவும் அவர் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் JVPயின் வேறோர் அலுவலகத்துக்கும் கொண்டு செல்லப்பட்டதாகவும் அங்கே அமைப்பின் மற்றோர் தலைவரான ஹேரத்துடன் நடந்த துப்பாக்கி மோதலில் இருவரும் பலியானதாகவும் இருவரது உடல்களும் அவசரகாலச் சட்டவிதிகளின்படி அழிக்கப்பட்டதாகவும் அரசு அறிவித்தது. ரேகணவின் மனைவி, ஐந்து பிள்ளைகள் அரச பாதுகாப்பில் இருப்பதாகவும் கூறப்படுகிறது●

— அபிமன்யு

## வாழ்த்துப் பெறும் நமீபியா!

சுமார் நூறு ஆண்டுகள் காலனித்துவ ஆட்சியின் கீழிருந்து நமீபியா கடந்த கார்த்திகை மாதம் ஆறாம் திகதி நடந்து முடிந்த தேர்தலின் மூலம் விடுதலை அடைந்துள்ளது.

நமீபிய மக்கள் தமது விடுதலையை 'சாம் நுஜோமாவின்' தலைமையின் கீழ் செயற்பட்டு வந்த தென் ஆபிரிக்க மக்கள் ஸ்தாபனத்தின் (SWAPO) மூலம் பெற்றுள்ளதுடன், இந்த ஸ்தாபனத்தின் தலைவரையே தமது நாட்டின் தலைவராக ஏற்றுள்ளனர்.

நமீபியாவின் முக்கிய பொருளாதார வளங்கள் எல்லாம் இன்னும் பத்து வருடங்களுக்குத் தேவையான பொருளாதார வளங்களையே தன்னகத்தே கொண்டுள்ளதாய் சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.


இந்நிலையில் புதிதாக உருவாகியுள்ள நமீபியாவின் பலவீனத்தைக் கருத்திற் கொண்டு தமது முகாம்களிற்குள் அரவணைத்துக் கொள்ளும் முகமாக வல்லரசுகள் போட்டி போட்டு உதவியளிக்க முன்வந்துள்ளன. இந்நிலையில் பதவியேற்ற இவ்வரசானது இவற்றுக்கு மத்தியில் எவ்வாறு தமது அரசியற் பொருளாதார கொள்கையை முன்வைக்கப் போகின்றது, மூன்றாம் உலக நாடுகளின் அணிசேராக் கொள்கையில் எந்த நிலையை வகிக்கப் போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகிறது.

நமீபியாவின் வரலாறு விடுதலைப் பாதையில் காலடி வைத்து செயற்பட்டு வரும் எமக்கு நல்ல உதாரணமாக அமைய வேண்டும்●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாறும் தலைமுறை ஆட்சி

பரம்பரை ஆட்சிக்கு முற்றுப்புள்ளி?

தென் ஆசியாவின் வல்லரசாக வளர்ந்து வரும் இந்தியாவின் 9வது லோக சபை(நாடாளுமன்ற) தேர்தலும் உத்தர பிரதேசம், ஆந்திரா, கர்நாடகம், சிக்கிம், கோவா ஆகிய மாநிலங்களில் சட்டசபைக்கான தேர்தல்களும் நவம்பர் மாதம் 22, 24, 26 ஆகிய திகதிகளில் நடைபெற்றன. சுமார் 800 மில்லியன் (80கோடி) மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்தியாவில் 500 மில்லியன் மக்கள் வாக்காளர்களாக பதியப்பட்டுள்ளனர். கடந்த தேர்தலில் தான் முதற் தடவையாக 18 வயதானவர்களிற்கும் வாக்குரிமை வழங்கப் பட்டுள்ளது.

லோகசபையின் மொத்தம் 543 தொகுதிகளில் அஸ்ஸாம் மாநிலத்தின் 14 தொகுதிகள் நீங்கலாக 529 தொகுதிகளிற்கு தேர்தல் நடைபெறவிருந்த போதிலும் ஜம்மு காஸ்மீர் மாநிலத்தின் தலைநகரான சிறீநகரில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதாலும் மத்திய பிரதேசத்தின் சதோல் தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி(BJP) வேட்பாளர் மரணமடைந்ததாலும் 527 தொகுதிகளிற்கே தேர்தல் நிகழ்ந்தது.

இந்திரா காங்கிரஸ் 508 இடங்களிலும் அதன் தோழமைக் கட்சிகள் 18 இடங்களிலும், ஜனதா தள் (ஜன்மோர்ச்சா, லோக்தள், ஜனதா இணைந்த கட்சி) தி.மு.க, தெலுங்கு தேசம், அசாம் கண பரிசத் ஆகிய கட்சிகள் இணைந்த தேசிய முன்னணி இந்திரா காங்கிரசை எதிர்த்தும் போட்டியிட்டன. இவை தவிர பாரதீய ஜனதா கட்சியும், மாக்சிச இடதுசாரிக் கட்சிகளும் தேசிய முன்னணியுடன் தொகுதி அடிப்படையில் உடன்பாடுகளை மேற்கொண்டு போட்டியிட்டன.

தேர்தலைக் கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட பஞ்சாயத்து ராஜ் சட்ட மூலம் அவசர அவசரமாக விவாதிக்கப்பட்டு வோகசபையில் நிறைவேற்றப்பட்ட உடன் ராஜ்ய சபைக்கு வந்த போது தோற்கடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து திடீரெனப் பொதுத் தேர்தலை ராஜீவ் அறிவித்தார். இக் குறுகிய அவகாசத்தில் எதிர்க் கட்சிகள் தமக்குள் ஏற்கனவே உள்ள கருத்து மோதல்களைத் தீர்க்கவோ, ஒற்றுமையை ஏற்படுத்தவோ முடியாது என்ற ராஜீவின் கணிப்பை எதிர்க் கட்சிகள் பொய்யாக்கின. விவேகத்துடன் செயல்பட்ட தேசிய முன்னணித் தலைவர்

www.tamilarangam.net

விஸ்வநாத் பிரதாப் சிங்(வி.பி.சிங்) பாரதீய ஜனதாவுடன் தொகுதி உடன்பாடு மேற்கொண்டு 315 தொகுதிகளைத் தாம் எடுத்துக் கொண்டு 205 தொகுதிகளை பாரதீய ஜனதாவிடம் விட்டுக் கொடுத்தார். 420 தொகுதிகளில் இருமுனைப் போட்டி ஏற்பட இது வழியமைத்தது. காங்கிரஸ் கட்சிக்கு எதிரான வாக்குகளைச் சிதறவிடாது செய்ய மாக்சிச இடதுசாரிகளுடன் உடன்பாட்டிற்கு வந்து அவர்களுக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்துவதைத் தவிர்த்த போதும் பாரதீய ஜனதாக் கட்சி இந்த இடங்களில் வேட்பாளரை நிறுத்தியமை காங்கிரசுக்கே சாதகமாகியது. வி.பி.சிங்கின் இம் முயற்சி காங்கிரசுக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியது.

தேர்தல் கால வன்முறைகள்

இந்தியாவின் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு தேர்தல் வன்முறைகள் இம்முறை தலைவிரித்தாடின. 150 பேர்வரை உயிரிழந்தனர். இன்றைய இந்தியாவின் நிலையை நோக்குகையில் முதறிஞர் ராஜாஜியின் தீர்க்க தரிசனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ராஜாஜி சிறையிலிருந்த போது 1922 ஜனவரி 26ம் திகதி தனது நாட்குறிப்பில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இந்தியா சுதந்திரமடைவது உறுதி. இதைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமோ என்னவோ தெரியாது. ஆனால் சுதந்திரம் அடைந்த இந்தியாவில் அரசியல் நாகரீகம் இருக்காது. தியாக உணர்வுகளும் இருக்காது. பதவிக்காகவும், பணத்திற்காகவும் ஊழல்களில் ஈடுபடுவோர் பெருமளவு அரசியலில் இருப்பார்கள். பாமர மக்கள் தொடர்ந்தும் பாமர மக்களாகவே இருப்பார்கள். ஆங்கில ஆட்சியில் நீதிக்கும் நேர்மைக்கும் ஒழுக்கத்துக்கும்



இருந்த மதிப்புப் போய் அராஜகமும் வன்முறையும் தலைவிரித்தாடும்." இந்த நாட்குறிப்பை தேர்தல் கால வன்முறைகள் நிதர்சனம் ஆக்குகின்றன.

வேலியே பயிரை மேய்வது போல ராஜீவின் அமேதி தொகுதியில் பொலிசார் அத்துமீறி வாக்குச் சாவடிகளில் புகுந்து வாக்கு அட்டைகளைத் திணித்துள்ளனர். தேர்தல் அதிகாரி ஒருவரின் கை துண்டாடப் பட்டுள்ளது. வி.பி.சிங், அவரது மருமகன் சஞ்சய் சிங் ஆகியோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்தது. அமேதி தொகுதியில் ராஜீவை எதிர்த்துப் போட்டியிட்டவரும் மகாத்மா காந்தி, ராஜாஜி ஆகியோரின் பேரனுமான ராஜ் மோகன் காந்தி பொலிசாரினுல் முரட்டுத் தனமாக நடத்தப்பட்டார். போபர்ஸ் ஊழல் பற்றியோ, அதனுடன் ராஜீவையோ அவரது நெருக்கமானவர்களையோ சம்பந்தப்

www.tamilarangam.net

படுத்தியோ தொலைக் காட்சியிலோ, வானொலியிலோ பேசக் கூடாது எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்தமையால் எதிர்க் கட்சிகள் இவை இரண்டையும் பகிஸ்கரித்தன.

தேர்தல் மோசடி பற்றிக் கருத்துத் தெரிவித்த ராஜ்மோகன் காந்தி, ராஜீவ் காந்தி தனது தேர்தல் தொகுதியில் பெரும் தேர்தல் மோசடிகளைச் செய்ததாகவும், சர்வதேசப் பத்திரிகையாளர்கள், சுதந்திர அவதானிகள் மத்தியிலும் துப்பாக்கிச் சூடு, கொலை மிரட்டல்களுக்கு மத்தியில் வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டு மோசடி நிகழ்ந்ததாகவும் கூறியுள்ளார்.

இந்தியாவில் பெரும்பாலானோர் கிராம மக்கள். 35% மக்களே படிப்பறிவு உள்ளவர்கள். இதனால் தேர்தல் மோசடிகள் சுலபமாக நடத்தப்படுகின்றன.

தேர்தல் வன்முறைகளை காங்கிரஸ் கட்சியும் கண்டித்துள்ளதுடன் இது ஜனநாயகம் மீதான காட்டுமிராண்டித் தனம் எனவும் இதற்கு தேசிய முன்னணியே முக்கிய காரணம் எனவும் குற்றம் சாட்டியுள்ளது.

ராஜீவ் அரசு மீது எதிர்க் கட்சிகள் பட்டியல் போட்டுக் குற்றச் சாட்டுகளைச் சுமத்தியுள்ளன.

1. எதிர்க் கட்சிகள் ஆளும் மாநில அரசுகளைக் கவிழ்க்க முயல்தல்
2. போபர்ஸ் பீரங்கிப் பேர ஊழல்
3. வெளிநாட்டில் சொத்துச் சேர்த்த இந்தியர்கள் தொடர்பான 'பெயர் பாக்ஸ்' விவகாரம்.
4. முன்னாள் வெளியுறவுச் செயலர் வெங்கடேஸ்வரனின் பதவி நீக்கம் தொடர்பான ராஜதந்திர மீறல்.
5. பஞ்சாயத்து ராஜ் மசோதா



போஃபர்ஸ் விவகாரம் சுவீடன் வானொலிக்கு தற்செயலாகத் தான் தெரிய வந்தது. ஈரானுக்கு எந்த ஒரு ஆயுதங்களையும் விற்பனை செய்யக்கூடாது என்பது சுவீடன் நாட்டரசின் உத்தரவு. இதை மீறி போஃபர்ஸ் நிறுவனம் ஈரான் நாட்டுக்கு விற்பனை செய்தது. இதுபற்றி சுவீடன் வானொலி விவாதிக்க முட்பட்ட போதே இந்தியப் பேரமும் தெரிய வந்தது!

6. இந்திரா காந்தி மரணம் தொடர்பான தர்க்கார் ஆணைக்குழு அறிக்கை.
7. அயோத்தி விவகாரம் (ராம ஜன்ம பூமி).
8. அமிதாப் பச்சன், அஜிதாப் பச்சன் தொடர்பான கறுப்புப் பண விவகாரம்.
9. முன்னாள் ஜனாதிபதி ஜெயில் சிங்கிற்குத் தெரியாமல் பல விடயங்களை அந்தரங்கமாக வைத்திருந்தமை.
10. இலங்கை இந்திய உடன்படிக்கை.
11. ஜேர்மனி நீர்மூழ்கிக் கப்பல் கொள்வனவில் நிகழ்ந்த ஊழல்.
12. பஞ்சாபின் தீராத பிரச்சனை.

<u>போபர்ஸ் பீரங்கி பேரஊழல்</u>

போபர்ஸ் பீரங்கி ஊழல் விவகாரத்தை சுவீடன் வானொலியே முதலில் வெளியிட்டது. இவ்விடயத்தை ராஜீவ் காந்தி மறுத்துரைத்த போதும் தன்னிடம் போதிய ஆதாரம் இருப்பதாக சுவீடன் வானொலி அடித்துக் கூறியது.

www.tamilarangam.net

இதைத்தொடர்ந்து விசாரணை நடாத்திய சுவீடன் தணிக்கைக் குழு இவ்விடயத்தில் சுமார் 64கோடி (இந்திய ரூபாய்கள்) மூன்று நபர்களுக்குக் கமிசனுக வழங்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டது. ஆனல் போபர்ஸ் நிறுவனமோ அது கமிசன் தொகை அல்லவென்றும், ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களை முறியடிப்பதற்காக வழங்கப்பட்ட ஒப்பந்த முறிப்புத் தொகை என்றும் வாதிட்டது. இந்நிலையில் இந்திய அரசின் பொது ஆய்வுத் தணிக்கை அதிகாரி, பீரங்கிக் கொள்வனவில் கமிசன் வழங்கப்பட்டதைக் கோடிட்டுக் காட்டியது. அதைத் தொடர்ந்து India Today பத்திரிகைக்கு முன்னுள் தளபதி சுந்தர்ஜி அளித்த பேட்டியும் பீரங்கி பேர கமிசனை உறுதிப்படுத்தின. பீரங்கி பேர கமிசனை எதிர்க் கட்சிகளைவிட, பத்திரிகைகளே முக்கியம் கொடுத்து அம்பலப்படுத்தின. இவ் விடயத்தில் த ஹிந்து(The Hindu) பத்திரிகையின் இணையாசிரியர் நரசிம்மன்ராம், ஜெனீவாவிலுள்ள ஹிந்து பத்திரிகையின் நிருபர் சித்ரா சுப்ரமணியம் ஆகியோர் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. இதைத் தவிர இந்தியன் எக்ஸ்பிரஸ் (Indian Express), இந்தியா ருடே (India Today) ஆகிய பத்திரிகைகளும் இவ்விடயத்தில் முன்னின்று உழைத்தன.

தேர்தல் முடிவுகளானது சுதந்திர இந்தியா இதுவரை காணுத பெரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. எக்கட்சியோ அல்லது




ராமர் அவதரித்த இடமெனக் கருதப்படும் அயோத்தியில் இராமர் ஆலயம் ஒன்று 425 ஆண்டுகளுக்கு முன்னர் இடிக்கப்பட்டு அவ்விடத்தில் மசூதியொன்று கட்டப்பட்டதாக தீவிர வலதுசாரி இயக்கமான ஆர்.எஸ்.எஸ் கூறுகிறது. அத்துடன் பாரதிய ஜனதா கட்சியும் இவ்விடயத்தல் ஆர்.எஸ்.எஸ் இற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், தற்போதுள்ள மசூதிக்கு அருகாமையில் புதிய இந்து ஆலயம் நிர்மானிப்பதற்கு ஆயத்தங்களைச் செய்து வருகின்றது. இக்கட்சி தற்போதுள்ள மசூதி இடிக்கப்பட வேண்டும் எனவும் கூறிவருகின்றது. 1875ம் ஆண்டில் இதுபற்றி விசாரித்த ஆங்கில நீதிபதி ஒருவர் இது இந்துக்களின் ஆலயம் என்பதில் சந்தேகம் இல்லையெனவும், எனினும் 300 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட மாற்றங்களை தன்னால் மாற்ற முடியாது எனவும் கூறியிருந்தார்.

எக் கூட்டணியோ பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெருத நிலையில் யார் அடுத்த அரசை அமைப்பது என்ற சிக்கலை ஏற்படுத்தியது.

ஆளும்கட்சியாக இருந்த இந்திரா காங்கிரஸ் சுமார் 191 இடங்களிலும், தேசிய முன்னணி 127 இடங்களிலும், பாரதிய ஜனதா 82 இடங்களிலும், இடதுசாரிக் கட்சிகள் சுமார் 40 இடங்களிலும் வெற்றி ஈட்டியுள்ளன. இவற்றில் வலதுசாரி அமைப்பான பாரதீய ஜனதாவும், இடதுசாரிக் கட்சிகளும்


www.tamilarangam.net

ஓரணியில் இயங்குவது சாத்தியமற்றது. அதே சமயம் பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து செயற்படுவதன் மூலம் சிறுபான்மை மக்களின் ஆதரவை இழந்து விடலாம் என்ற அச்சத்தில் பாரதீய ஜனதாவுடன் இணைவதைத் தேசிய முன்னணியும் விரும்பவில்லை. இந்நிலையில் தேசிய முன்னணித் தலைவர் வி.பி.சிங் இவ்விரு கட்சிகளுடனும் நடாத்திய பேச்சு வார்த்தையின் விளைவாக, பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளான மார்க்சிச இடதுசாரிக் கட்சியும் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் அரசாங்கத்தில் இணையாமல் தேசிய முன்னணிக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்குமெனக் கூறியுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

புதிய பிரதமராக விஸ்வநாத் பிரதாப்சிங் பதவியேற்றுள்ளார். பாராளுமன்றத்தில் தனது அரசுக்கு பெரும்பான்மை பலம் இருக்கின்றது என்பதை ஒருமாத காலத்துக்குள் நிரூபிக்கவேண்டும். அவ்வாறு நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் அரசாங்கத்தை அமைக்கும்படி இந்திரா காங்கிரஸ் கட்சியை அழைக்கவோ அன்றேல் பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலுக்கு உத்தரவிடவோ அரசியலமைப்புச் சட்டம் ஜனாதிபதிக்கு இடமளிக்கிறது.

<u>இந்திரா காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம்</u>

1984இல் திருமதி இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் நிலவிய அனுதாப அலையினாலும் திருமதி காந்தியின் மகன் என்பதாலும் வெகு இலகுவாக தேர்தலில் வெற்றிபெற்று சுமார் 415 இடங்களைப் பெற்று அசைக்கமுடியாத பெரும்பான்மை பலத்தை ராஜீவ் பெற்றார். பிரதமர் பதவியேற்றதும் இந்தியாவை 21ஆம் நூற்றாண்டின் தொழினுட்ப யுகத்துக்கு அழைத்துச் செல்வதாகக் குறிப்பிட்டதுடன் ஊழலற்ற சிறந்த நிர்வாகம் நடாத்தப்படுமென அறிவித்தார். இதனால் பத்திரிகைகளில் இவர் திருவாளர் பரிசுத்தம் (Mister clean) என்று அழைக்கப்பட்டார். எனினும் ஆட்சியின் இறுதி மூன்று வருடங்களிலும் பலதரப்பட்ட சிக்கல்களுக்கு உள்ளானார்.



நடைபெற்ற தேர்தலில் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளை பெற்றவர் தேசிய முன்னணி செயலாளர் ராம்விலாஸ் பஸ்வான் ஆவார். இவர் 4,93,377 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டி உலகில் அதிக வாக்குகளால் வெற்றி பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இவர் ஏற்கனவே 1977ல் நடைபெற்ற தேர்தலில் நாலு இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளால் வெற்றி பெற்றமைக்காக இவரது பெயர் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்முறை தேர்தலில் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட அனைவரும் கட்டுப் பணம் இழந்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பெயர் பாக்ஸ்" விடயமாக எழுந்த கருத்து முரண்பாடுகளைத் தொடர்ந்து கட்சியின் மூத்த உறுப்பினரும் பாதுகாப்புத் துறை, நிதித் துறை ஆகியவற்றில் அமைச்சராகக் கடமை ஆற்றியவருமான வி.பி.சிங் கட்சியிலிருந்து வெளியேறி "ஜன்மோர்ச்சா" என்ற கட்சியைத் தொடங்கினர். இவருடன் சேர்ந்து ராஜீவ் காந்தியின் மைத்துனரும், இராஜாங்க பாதுகாப்பு அமைச்சருமான அருண் நேருவும் கட்சியை விட்டு வெளியேறினர். இதைத் தொடர்ந்து மேலும் இருவர் வெளியேறினர். இது மட்டுமன்றி மத்தியபிரதேசம், பீகார், குஜராத் போன்ற மாநிலங்களில் நிலவும் உட்கட்சிப் பூசலும், போபர்ஸ் பீரங்கி ஊழலும் நிர்வாக சீர்கேடுகளுமே கட்சியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

கடந்த 14 வருடங்களில் காங்கிரசுக்கு ஏற்பட்ட இரண்டாவது தோல்வி இதுவாகும். 1977 தேர்தலில் அப்போதைய பிரதமராக இருந்த இந்திரா காந்தியை சிங்மங்களூர் தொகுதியில் 77,000 அதிகப்படியான வாக்குகளால் ராஜ்நாராயணன் தோற்கடித்தார். சஞ்சய் காந்தியும் இத்தேர்தலில் தோல்வியடைந்தார்.

காங்கிரஸ் கட்சி வீழ்ச்சியுற்றுள்ள போதும் நாடாளு மன்றத்தில் தனிக்கட்சி என்ற அளவில் காங்கிரஸ் கட்சியே அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளது. வடமாநிலங்களில் பெருமளவு இழப்புகளைச் சந்தித்துள்ள இக்கட்சி தென் மாநிலங்களில் எதிர்பாராத பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 37 இடங்களிலும் (பாண்டிச்சேரி உட்பட) காங்கிரஸ் கட்சி, அ.இ.அ.தி.மு.க. கூட்டு முன்னணியே வெற்றி ஈட்டியுள்ளது. ஆந்திர பிரதேசத்தில் தெலுங்கு தேசக் கட்சி ஒரே ஒரு இடத்தில் மட்டும் வெற்றிபெற, ஏனைய இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியதுடன் ஆறு வருடங்களின் பின் மாநில சட்டசபையையும் கைப்பற்றியுள்ளது. அதைப்போல் கர்நாடக சட்டசபையையும் கைப்பற்றிய காங்கிரஸ் கேரள மாநிலத்திலும் பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது.

– சஞ்சயன் –

புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள வி.பி.சிங் மிகுந்த திறமைசாலியும் அனுபவசாலியும் ஆவார். தேர்தலைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்த புதிய பிரதமர் போபர்ஸ் ஊழல், ஜேர்மன் நீர்மூழ்கிக்கப்பல் விவகாரங்களின் உண்மை கண்டறியப்படும் எனவும் தனது அரசில் பழிவாங்கும் சம்பவங்கள் இடம்பெறு எனவும் இலங்கையிலிருந்து படைகள் விலக்கிக் கொள்ளப்படும் எனவும் உறுதியளித்ததுடன் "அயோத்தி" விவகாரத்தில் சகல இனத்தவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நல்லதொரு தீர்வு எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

1977 இல் மிகப்பெரும்பான்மை பலத்தில் பதவியேற்ற ஜனதா அரசு இரண்டரை ஆண்டுகளில் சிதறிச் சின்னபின்னமாகியது. இதைக் கருத்திற் கொண்டு வி.பி.சிங் திறமையாகச் செயற்படுவாரா? அல்லது மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி கவிழ்க்கப்படுமா? எல்லாம் எதிர்க் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்படுவதிலேயே தங்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தயாரம்



நல்ல மழை பெய்யத் தொடங்கி விட்டது. ஊரில் மழை பெய்வது போன்று ஒஸ்லோவில் மழை பெய்வது ஒரு சுகமான அனுபவமில்லை. கோடை காலச் சப்பாத்துகள் நனையத் தொடங்கிவிடும். பிறகு, ஊறிப்போன சப்பாத்துகளில் பரவும் நீர் உள்ளேயும் போய்க் கால்களையும் நனைத்து ஏற்படுத்தும் விறைப்பு தாங்க முடியாதது.

சென்றலில் இறங்கிய போதுதான் அந்த அவஸ்தை தரும் மழை பெய்ததை ராகவன் கவனித்தான். எங்கேயாவது ஒதுங்கலாம் என்ருல் அவனது அவசரம் இடம் கொடுக்கவில்லை. மனமும் பெரிதாக நிம்மதியாக இல்லை. மழை இப்போது அவனைப் பெரிதாகப் பாதிக்குமா என்பதும் சந்தேகம் தான். அதுபற்றி ஆறுதலாக நின்று யோசிக்காமல் 'தேபானு'க்காகக் கீழிறங்கினுன்.

அவசர அவசரமாக இறங்கியபோது ஒரு 'குருவிக்காரி' அவனை வழிமறித்து சிகரட் கேட்டாள். அலட்சியமாக அவளைக் கடந்து சனங்கள் சரமாக இறங்கும் படிகளில் தானும் துரிதம் கொண்டான். வெஸ்லிக்குப் போகும் 'தேபான்' வர இன்னும் ஒரு நிமிடம் தான் மிச்சம் இருப்பதை உணர்ந்தான். அவசரமாகப் படியிறங்கியதில் மூச்சிரைத்தது.

"டேய்! எங்கை அவசரமா ஒடுருய், இங்கை வா" என்றபடி சிவம் நின்ருன். 'அட கடவுளே இந்த நேரத்திலை இவன் வேறை வந்து கழுத்தை அறுக்கவேணுமா' என்றபடி சிவத்தைப் பார்த்தான். "எங்கை குறுறுாட்டுக்கோ? ஒரு பெட்டையளையும் நிம்மதியா இருக்க விடமாட்டியளே" என்று தனக்கே உரிய பாணியில் 'அறுக்க' ஆரம்பித்தான் சிவம். அவன் எப்போதுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படித்தான். சம்பந்தமே இல்லாமல் கதைப்பான். வழமையாக அவனது கதைகள் சுவையூட்டா விட்டாலும் எரிச்சலைத் தருவதில்லை. ஆனல் இன்று அப்படியில்லை. ராகவனுக்கு இந்தக் கதை எரிச்சலையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்திற்று. ஏதோ பதிலுக்குச் சொல்ல வாயெடுத்தவன் இருட் குகையூடே வரும் 'தேபான்'ஐக் கண்டதும் ஒன்றும் சொல்லாமல் சிரித்தபடி "சரி வாறனடாப்பா அந்தப் பிரச்சனையைப் பிறகு பாப்பம்" என்ருன். குளிர் காற்றையும் அள்ளிக் கொண்டு இரைந்தபடி வந்து நின்றது 'தேபான்'.

நல்லவேளை, சனம் அவ்வளவு இல்லை. ஆறுதலாகப் போய் ஒரு மூலையில் இருந்தான். மனம் பாரமாக இருப்பதை உணர்ந்தான்.

எத்தனை துயரம் இது? இன்று முழுவதும் வேண்டுமானல் அழலாம். அழுவதை ராகவன் பெரிதும் வெறுத்தான். ஆனல், இன்று அழுவதைத் தவிர வேறெதையும் அவனல் செய்ய முடியுமா என்பதும் கேள்வியே. குறுநூட்டுக்குப் போனல் சிவனேசனுடனவது இந்தத் துயரத்தைப் பங்கு போடலாம். துன்பம் நேர்கையில் யாழெடுத்து மீட்ட யார் இருக்கிருர்கள்?

நேற்றிரவு தான் ஜேர்மனியிலிருந்து கருணு தொலைபேசியில் அந்தத் தகவலைச் சொன்னுன். பட்டென்று இதயம் ஒரு நிமிடம் தரித்தது. சொன்ன தகவல் உண்மையாக இருக்கக் கூடாது என மனதில் வேண்டியபடி மீண்டும் கேட்டான். தகவல் அட்சரம் பிசகாமல் சரியாக இருந்தது.

"சிகாமணி அண்ணையைச் சுட்டுப் போட்டாங்கள்."

"ஏன்? என்ன நடந்தது?"

"அவற்றை மகன் ஏதோ இயக்கத்திலை இருந்தவனும், அதுதான் மற்ற இயக்கப் பெடியள் வந்து ஏதோ விசாரணை எண்டு கூட்டிக் கொண்டு போனவங்களாம், அடுத்த நாள் சுடலைக்குள்ள பிரேதம் கிடந்து எடுத்தவங்களாம்."

"ஆர் கொண்டவங்களாம்?"

"ஒருத்தருக்கும் தெரியாது"

ராகவன் பேசாமல் தொலைபேசியைக் கீழே வைத்தான். எந்த நியாயம் இந்தக் கொலை நிகழக் காரணமாய் இருந்திருக்கும்? எந்த வகையில் இந்த மரணம் சேர்க்கப்படப் போகிறது? ஒரு துரோகியாக சிகாமணி அண்ணை — கடவுளே!

அவனது இளமைக் காலங்களுக்கும் சிகாமணி அண்ணைக்கும் ஒரு பெரிய தொடர்பே இருந்தது. அவனது மட்டுமல்ல, கருணு, தவம், தேவன், சிவநேசன் எல்லோருடையதும் தான். ஒரு காலத்தில் அவர்களில் யாராவது இளமைக் காலங்கள் பற்றி எழுதினல் சிகாமணி அண்ணைக்கு நிச்சயம் ஒரு முக்கிய பாத்திரம் இருக்கும். அவர்களது வரலாறு எழுதப்படும் அளவு அவர்கள் பெரிய வீர புருசர்கள் இல்லையே! சாதாரண இளைஞர்கள்! ஒருத்தி எதிர்பாராது சிரித்துவிட்டால் நித்திரை இழக்கும் இளைஞர்கள்.

சி. அருள்வரதன்,
லில்லஹம்மர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிகாமணி அண்ணை அவர்களின் வாழ்வில் சந்தித்தது ஒரு விபத்துப் போலத்தான். 'ஓ.எல்' எடுத்துவிட்டு ஊர்சுற்ற நேரமும் ஓரளவு அங்கீகாரமும் கிடைத்த காலங்களில் அவர்கள் சிகரெற் பற்ற வைக்கும் பரீட்சார்த்த முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஒரு திகிலூட்டும் அனுபவம் மாதிரித்தான் சிகரெற் பற்றவைப்பதும் அவர்களுக்கு, அப்போது இருந்தது. எங்கேயாவது கொஞ்சம் தொலைவு போய் சிகரெற் வாங்குவார்கள். ஆனால், பற்றவைப்பது என்னவோ ஊருக்குள்தான். கொஞ்சம் 'அனுபவம்' உள்ளவர்கள் சிகரெற் பற்ற வைக்கிற போது பிளேன்ரீ குடிக்காமல் இருக்கமுடியாது என்பது போலவோ, அல்லது இவையிரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாதவை என்றோ கூறியதை சிவநேசன் மனதுக்குள் புதைத்து வைத்திருந்தான். இது, அவர்களுக்கு ஏற்படுத்திய சிக்கலுக்கு விடை, சிகாமணி அண்ணை.

ஊருக்கு ஒரு கோடிப்புறத்தில் சிகாமணி அண்ணையின் கடை. கடையில் சுவர் முழுவதும் மெலிதாகப் புகை படர்ந்திருக்கும். புகையையும் தாங்கியபடி அமைதியாக இருக்கும் சுவாமி படங்கள். என்ன ஏதென்று இல்லாமல் எதையாவது போட்டு நிரப்பி வைக்கப்பட்டிருக்கும் ஒரு அலுமாரி. வாசலோடு ஒட்டினாற் போல வழமையான தேநீர்க் கடைகளில் இருக்கும் பலகார அலுமாரி. இடையில் எப்பொழுதாவது அந்த அலுமாரிக்குள் வடை இருப்பதைக் காணலாம். மற்றப்படி, தேநீர் உண்டு, தேநீர் என்றால் அப்படி ஒரு சுவை. யாரும் ஒரு தரம் குடித்தால் மறுபடி வரச் சொல்கிற தேநீர்.

அவர்கள் எல்லோருக்குமே அந்தத் தேநீர் மட்டுமல்ல, அந்தக் கடையின் தனிமையும் இனிமையாக இருந்தது. பூவரச மரத்தைத் தாண்டி இதமாக வருகிற காற்று, சிகரெற்றையே மறக்கும்படி சிலசமயம் செய்துவிடும். அவர்களின் புத்திளமைக் கதைகளில் பாதியை இந்தப் பூவரசும், கடையைச் சுற்றி உலா வருகிற காற்றும் கேட்டிருக்கும். அவ்வளவு தூரம் அவர்களை அந்த இடம் கவர்ந்துவிட்டது.

சோளகம் பூமியை உலுப்பிக் கொண்டிருந்த ஒரு நாளில்தான் சிகாமணி அண்ணை அவர்களுடன் முதன்முதலாகப் பேசினார். "தம்பிமார் சிகரெற் பத்திறது வீட்டை தெரியுமே?" கடையில் வேறு எவரும் இல்லாத நேரம்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது, என்றாலும் யாரும் பதில் சொல்லவில்லை.

பிறகு, "தம்பி, நானும் உங்கடை வயதைக் கடந்துதான் வந்தனான், எனக்கும் நல்லது கெட்டது தெரியும். இது அவ்வளவு நல்லது மாதிரித் தெரியேல்லை." என்று ஒரு சின்னப் பிரசங்கமே நடத்திவிட்டார் சிகாமணி அண்ணை.

இவர்கள் எவரும் எதுவும் பேசவில்லை. ஆற யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள் - இனிமேல் அந்தக் கடையில் சிகரெற் பற்றவைப்பதில்லை.

ஆனாலும் அங்கு செல்லாமல் தவிர்க்க அவர்களால் முடியவில்லை. அனேக மாலைப்பொழுதுகள் அங்கேதான் கழிந்தன. இந்தக் காலத்தில் சிகாமணி

www.tamilarangam.net

அண்ணையை ஏதோவிதத்தில் அவர்களுக்குப் பிடித்துப் போய்விட்டது. அவருடன் எதுவும் கதைக்கலாம். அமெரிக்கா எங்கெங்கே சுரண்டுகிறது, பகவத் கீதை என்ன சொல்கிறது, சேகுவேரா என்ன செய்தான், இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது காந்தியா, சுபாஸ் சந்திரபோஸா - எல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தது.

எல்லாம் ஆச்சரியம் தருகிற வேகத்தில் வருகிற தகவல்கள். ஒன்றும் தெரிந்துகொள்ளும் ஆவல் அவர்களுக்கு இல்லாவிட்டாலும் அவரது கதை சுவையாக இருக்கும். அதற்காகவே அவர்கள் அங்கு வனசரி மாலையும் போகும்படி ஆகிவிட்டது. இது ஒரு நீண்டகால பழக்கமாகவும் ஆகிவிட்டது. சிவநேசனின் அப்பா இறந்தபோது சற்றும் எதிர்பாராத விதமாக அங்கு சிகாமணி அண்ணை பிரசன்னமாயிருந்தார்.

"தம்பி, மற்றவையளின்ரை துன்பத்திலைதான் பங்கு கொள்ளவேணும், இன்பத்திலை பங்கு கிடைச்சால் ஏற்றுக் கொள்ளவேணும், இல்லாட்டி விட்டிடவேணும்."

சிகாமணி அண்ணை கடவுள் மாதிரித் தெரிந்தார் அவர்களுக்கு.

அந்த நண்பர் கூட்டத்தில் இருந்து முதலில் பிரிந்தது தேவன்தான். ஊரில் அவன் பயணம் சொன்னவர்களில் சிகாமணி அண்ணையும் இருந்தார். "பெரிய படிப்பு எண்டு எதுவுமில்லை, உலகத்தைப் படியும் தம்பி" என்று அவனிடம் சொல்லி அனுப்பினார் சிகாமணி அண்ணை. கண்டிக்குப் படிக்கப்

# தண்டனை

உனக்குத்தண்டனை அளித்தவர் பெயரில்,
இன்று மட்டும் இரக்கமாய் இருக்கிறேன்.
நேற்று வரைக்கும் எமது மக்கள்
கடலில் சென்றதாய் யாதுமறியேன்.
உனது சேதியைச் சுமந்த அலைகளும்
மௌனமாக ஆழக்கிடக்கின்றன...

ஒருநாள் சூரியன் கோபமாய் உதிப்பான்!

உடமையற்றவர் உரிமைபெற்று;
கிராமத்துவெளிகளில் ஒன்ருய்க் கூடுவர்.
உனது பெயரால் தண்டனை கோரி,
அனைவரும் ஒன்ருய்ப் பாடுவர் அங்கே...

உனக்காகவும் ஓர்பாடல்.
இசைப்பதைத் தென்றல் சுமந்துசெல்லும்...

வயவைக்குமரன்.

போனவன் ஒரு அனுபவம் நிறைந்த மனிதனுய்த் திரும்பினுன். பிறகு, மேலே படிக்க லண்டன் போனுன்.

அவனுக்குப் பிறகு எல்லோரும் சிதறுண்டு போனுர்கள். தவம் இயக்கத்தில் போய் இறந்தான். கருணு ஜேர்மன் போனுன். சிவநேசன் தமையன் உதவியதில் நோர்வே வந்தான். கொஞ்சக் காலம் ராகவன் ஊரில் இருந்தான். எல்லாமே வெறுத்துப்போய்க் கடைசியில் அவனும்

www.tamilarangam.net

நோர்வேயையே தனது தெரிவாக்கினுன்.

கடைசியாய் சிகாமணி அண்ணை கடையில் அவன் தேநீர் குடித்தபோது தனது பயணம் புற்றிச் சொன்னுன்.

"தம்பி, தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும்" என்ருர் சிகாமணி அண்ணை. மனசுக்குள் துக்கத்தைத் தாங்கியபடி அந்த வார்த்தைகளை மட்டும் நினைவில் நிறுத்திக்கொண்டு ஊரைப் பிரிந்தான் ராகவன்

"நெஸ்ர ஸ்ரகுன் அர் குறுறுாட்"

திடுக்கிட்ட ராகவன் இறங்கி வெளியேவர சிகரெற் பற்றியபடி சிவநேசன் நின்ருன். ஒன்றுமே பேசாமல் அவனது தோளை ராகவன் பற்றிக் கொண்டான். குளிர்ந்து போன தன் கையால் இவனது முகத்தை நிமிர்த்திய சிவநேசன் தாழ்ந்த குரலில் சொன்னுன்.

"எனக்கு எல்லாம் தெரியும்"

காற்றில் இறக்கைகள் விரித்து இறங்குவதுபோல் பாரமற்றுத் தலைமீது இறங்கும் வெண்பனியைப் பற்றிக் கவலைப்படாமல் வீடு நோக்கி மெதுவாக இருவரும் நடக்கத் தொடங்கினர்.

## ஓவிய சாதனை

'ஆப்பிள் மரம்' ஓவியம் நோர்வே வரலாற்றில் சாதனை படைத்துள்ளது! அண்மையில் நடைபெற்ற ஓவிய விற்பனையில் 'நிக்கலாய் அஸ்ரப்' இனது இந்த ஓவியம் 2.4 மில்லியன் குரோனருக்கு விற்பனைச் சாதனையை எட்டியுள்ளது.

இவரது மற்றுமொரு ஓவியமான 'பாறை மீது பறவை' ஓவியமும் ஆறு லட்சத்து முப்பதாயிரம் குரோணர்களுக்கு விற்பனை ஆகியுள்ளது.

இதே ஓவிய விற்பனையில் புகழ் பெற்ற 'எட்வேட் மூஞ்ச்' இன் 'கரையோர வீடு' எனும் ஓவியம் ஒரு லட்சத்து எண்பத்து இரண்டாயிரம் குரோணர் வரை போயின!


தற்போது வெளிநாட்டு விற்பனை நிறுவனங்கள் நூர்டிக் நாடுகளின் பொற்கால (Golden age) ஓவியங்கள் மீது அதிகளவு நாட்டம் காட்டி வருகின்றன.

யசோதா.



***Edvard Munchs «Huset ved kysten»***

www.tamilarangam.net



# பிசாசுக் கவிதை

இரு புறமும் துப்பாக்கி
நடுவில் நான்
அப்பாவிப் பொதுமகன்
என் பேர்.

ஊரில்லை எனக்கு,
முன்பு இருந்தது
இப்போ தொலைந்துவிட்டது.
(புண்ணிய பாரதத்துக்கு நன்றி!)

இரு புறமும் துப்பாக்கி
நடுவில் நான்;
எரிகின்ற நெருப்புக்கும்
நடுவில் தான்.

அவன் 'இரு' என்ருல்
இவன் 'எழும்பு' என்பான்.
இவன் 'போ' என்ருல்
அவன் 'வா' என்பான்.

அவன் 'இற' என்ருன்.
இவன் 'இரு' என்ருன்.
அவன் உடலைக் கொன்ருன்.
இவன் ஆத்மாவைக் கொன்ருன்.

இப்போ நான்
பிசாசானேன்

கௌதமனின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ராஜினி

இன்னும் கொஞ்ச நேரத்தில்
சூரியன் மறைந்து விடுவான்.
இருள் கவிந்துவிடும்

இனி வரப்போகிற இருள்
முன்பு போல அல்ல;
பிசாசு.

நிலவைக் கொலை செய்து
வெள்ளிகளைப் போட்டெரித்த
சாம்பல் பூசிய இரவு.
இந்த இரவுக்கு முன்
ஒரு சிறு கைவிளக்கை
அல்லது ஒரு மெழுகுதிரியை
ஏற்றிவிட வேண்டும் என்று விரைந்தாய்.

அம்மா,
வேகம் அவர்க்கதிகம், இன்று
தென்திசை நின்று வந்தனர்
யமனின் தூதர்கள்
கைத்துப்பாக்கி,
ஐந்து குண்டுகள்.

நீ விழுந்த போது
சூரியனின் கடைசிக் கிரணங்கள்
சுவரில் விழுத்திய

உன் நிழல்
கைகளை வீசி மேலே ஓங்கிற்று
முடிவிலி வரை



# கிழக்கும் மேற்கும் சந்திக்கின்றன

தீசன்



இருபத்தெட்டு வயதில் மரணத்தைத் தழுவுவது துயரம்தான். ஆனல் அவ்வாருன ஒரு மரணத்தை பல லட்சம் மக்கள் ஒரு விழாவாகக் கொண்டாடினர்கள். ஆம், மேற்கு ஜேர்மனியில் பேர்லின் சுவரின் மரணமே அவ்வாறு விழாவாகக் கொண்டாடப்பட்டது. பௌதீக ரீதியில் சுவர் இன்றும் பல பகுதிகளில் உயிரோடு இருந்தாலும், சுவருக்கு இப்போது உயிர் இல்லை. கடந்த காலங்களின் ஒரு கறை போல அது நிற்கிறது.

1961 ஆவணி மாதம் கிழக்கு ஜேர்மனி அரசால் பேர்லின் நகரை இரண்டாகப் பிரிக்கும் சுவர் இரவோடு இரவாக நிறுவப்பட்டது. 1949ல் ஜேர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்ட நாளில் இருந்து மேற்கு ஜேர்மனியை நோக்கி ஏராளமான கிழக்கு ஜேர்மனியர்கள் தப்பி ஓடினர். இது பெரும் தொழிலாளர் தட்டுப்பாட்டை ஏற்படுத்திற்று. இதுவரை 27லட்சம் மக்கள் அவ்வாறு ஓடியுள்ளனர். 1961 ஆடி மாதம் மாத்திரம் 30,000 பேர் தப்பி ஓடினர். இவ்வாருன புலப் பெயர்வைத் தடுக்க நிறுவப்பட்ட பேர்லின் சுவர் பல குடும்பங்களைத் துண்டாடியது.

சுவர் எழுப்பப்பட்ட நாளிலிருந்து இதைத் தாண்டித் தப்புவது பல வழிகளில் நடந்துள்ளது. சிலர் சுரங்கம் அமைத்தும் தப்பியுள்ளனர். தப்பும் வழிகளில் கொலையுண்ட 75 பேருக்கு மேற்குப்

www.tamilarangam.net

பகுதியில் நினைவுக் கற்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலக யுத்த முடிவில் கிழக்கு ஐரோப்பா சோவியத்திடமும் மேற்கு, அமெரிக்காவிடமும் சிக்கியது போல ஜேர்மனியும் பேர்லின் நகரும் துண்டாகின. அண்மைக் காலங்களாக கிழக்கு ஐரோப்பாவில் தொடர்ச்சியாக அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதில் அதிகத்தை ஹங்கேரி சுவீகரித்துக் கொண்டது. இதுவே ஹங்கேரி தனது எல்லையில் முள்வேலிகளை அகற்றிவிடக் காரணம். இதைப் பயன்படுத்தி கிழக்கு ஜேர்மனியர் மேற்குக்கு தப்பி ஓடினர். தொடர்ச்சியாக மக்கள் பெருமளவில் தப்பி ஓடியது அரசுக்குத் தலையிடியாய் இருந்தது. தொடர்ந்த மக்களின் பேரளவிலான ஆர்ப்பாட்டங்கள் பேர்லின் சுவரை அரசு திறக்கக் காரணமாயின. பேர்லின் எல்லை திறக்கப்பட்ட 48 மணிநேரத்தில் 20லட்சம் பேர் எல்லை தாண்டினர்.

உள்ளே வந்தவர்களில் சிறு பகுதியினரே அங்கேயே தங்கினர். ஏனையோர் தமது நாடு திரும்பினர். வந்த விருந்தாளிகளுக்கு மேற்கு அரசால் சிறுதொகைப் பணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கிழக்கின் நாணயம் மேற்கில் செல்லுபடியாவதில்லை. எல்லை திறக்கப்பட்ட நாள் விழாக் கோலம் பூண்ட பேர்லின் பற்றி ஒரு வானொலி 'புதுவருடமும் கிறிஸ்மஸ் நாளும் ஒன்றாக வந்தது போல' என வர்ணித்தது. எல்லோரும் பியர், ஸம்பெயின் என்று 'ஆனந்த வெள்ளத்தில்' மூழ்கினர்.


மேற்கு நாடுகளில் பிரச்சாரம் செய்யப்படுவது போல கிழக்கில் இருந்து வந்தவர்கள் அங்கேயே தங்க விரும்பவில்லை. பதிலாக நாட்டை விட்டு வெளியேறும் சுதந்திரம் தமக்கு வேண்டும் என்றே விரும்பினர். அதே போல மேற்கு ஜேர்மனியும் அதிகம் பேருக்கு வரவேற்புக் கூற ஆயத்தமாக இல்லை. ஏற்கனவே உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் (7%) வீட்டுப் பிரச்சனை போன்றன கொடுக்கும் சிரமம் மேலும் மோசமாவதை யார்தான் விரும்புவார்கள்? ஏற்கனவே இவ்வருடம் இரண்டரை லட்சம் கிழக்கு ஜேர்மனியர்களும், சுவர் திறக்கப்பட்ட 24 மணி நேரத்தில் ஒன்றரை லட்சம் பேரும் மேற்கிலேயே தங்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மக்கள் பெரும் தொகையாக வெளியேறியது முதல் கிழக்கு ஜேர்மனியில் பல மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்கின்றன. கிழக்கு ஜேர்மனியில் தேர்தல் நடத்தவும் ஜனநாயக அரசொன்றை நிறுவவும் அரசு ஒப்புதல் கூறியுள்ளது. அரசுக்கெதிராகக் கருத்துக் கூறப் பயந்தோர் தற்போது பகிரங்க மேடைகளில் பேசுகின்றனர்.




'I JUST KEPT PECKING AT IT.'

www.tamilarangam.net



மாக்சிசத்தை அரச கோட்பாட்டிலிருந்து கைவிட அரசு சம்மதம் கூறியுள்ளது. முன்னர் அதிபராக இருந்த எரிக் ஹொனேகர் உட்படப் பல தலைவர்கள் அதிகார துஸ்பிரயோகம், ஊழல் போன்ற குற்றச் சாட்டுகளின் பேரில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். இரகசியப் பொலிஸ் அமைப்பு கலைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக சாத்தியமற்றது எனக் கருதப்பட்ட இரு ஜேர்மனிகளின் இணைப்பு பற்றி இப்போது பேசப்படுகிறது. எனினும் இணைப்பு ஐரோப்பாவின் பாதுகாப்பு, அரசியல் சமநிலையைப் பாதிக்கும் என்று சோவியத் கூறியுள்ளது. இக் கருத்தை பிரான்சும் வரவேற்றுள்ளது.

போலந்தில் தேர்தல் நடந்து கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்க் கட்சியான சொலிடாரிட்டியும் அரசு அமைத்தது போல செக்கோஸ்லவாக்கியாவிலும் தற்காலிகமாகக் கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்க் கட்சியும் இணைந்துள்ளன. தற்போது கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அடுத்த நாள் என்ன நிகழும் என உறுதியாகக் கூற முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளன.

'இது கம்யூனிசத்தின் தோல்வி' எனப் பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் கார்ல் மாக்சின் சிந்தனைகள் தோல்வி அடைவதாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளை உதாரணம் காட்டி யாரும் கூறமுடியாது. ஏனெனில் இவை உண்மையாக சோசலிச நாடுகள் என அழைக்கப்பட முடியாதவை. மாக்சியத்தின் நடைமுறையில் ஏற்படக்கூடிய சிக்கல்களைப் பற்றி இன்றைய நிலைகள் புரிய வைக்கின்றன. இவற்றிலிருந்து கற்பதே முக்கியமானது. இதை உதாரணம் காட்டி கம்யூனிசத்தின் தோல்வி எனக் குறிப்பிட முடியுமானால் பிலிப்பைன்சில் மார்க்கோசின் வீழ்ச்சி, பாகிஸ்தானில் ஸியாவின் வீழ்ச்சி, நிக்கரகுவாவில் சோமோசாவின் முடிவு யாவும் 'ஜனநாயகத்தின் வீழ்ச்சி' எனக் குறிப்பிடப்படக் கூடியவை. ஏனெனில் இவை யாவும் 'ஜனநாயகக் காவலன்' அமெரிக்காவினால் ஆசீர்வதிக்கப்பட்ட அரசுகளே.

தற்போதைய கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் மக்கள் கருத்து ரீதியாக ஒன்றுபட்டால் போராடத் தயங்க மாட்டார்கள் என்பதையே காட்டுகின்றன. இது எல்லோரும் சமமாக மதிக்கப்பட வேண்டிய சமூகத்தில் தமது நலன்களை மட்டும் விருத்தி செய்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுக்கு மட்டுமல்ல, மேற்குக்கும் மக்கள் விடுத்துள்ள எச்சரிக்கையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணவனுடன் உடன்கட்டை ஏறிய ரூப் கன்வா


'Flames over India' என்ற தொலைக் காட்சித் தொடர் சில காலங்களுக்கு முன் நோர்வே தொலைக் காட்சியில் ஒளிபரப்பான போது ஒரு பெண் தன் கணவனுடன் உடன்கட்டை ஏறுவதைப் பார்த்த எனது நோர்வேஜிய நண்பி ஒருத்தி உடனே கண்களை மூடிக்கொண்டாள். இந்தக் கதை சுதந்திரத்துக்கு முந்தைய இந்தியாவை சித்தரித்தாலும் உடன்கட்டை ஏ(ற்)றும் பழக்கம் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ராஜஸ்தான் மாநிலத்தின் தியோராலா என்ற கிராமத்தில் இரு வருடங்களுக்கு முன் பதினெட்டு வயதான ரூப்கன்வார் என்ற இளம்பெண் தனது கணவரின் சிதைக்குள் எரியூட்டப்பட்டாள். நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பே உடன்கட்டை ஏறுவதற்கு தடைச் சட்டம் கொண்டு வரப்பட்ட போதும் இந்த உடன்கட்டை நிகழ்ச்சி எவராலும் தடுத்து நிறுத்தப்படவில்லை.

இந் நிகழ்ச்சியை ஒரு விழா போலவே கொண்டாடினர்கள் ராஜபுத்திரர்கள். சிதையில் ரூப் கன்வார் எவ்வளவு தூரம் வெந்து துடித்திருப்பாள் என்பது மறக்கப்பட்டு அவள் 'சதிமாதா' (உடன்கட்டைத் தாய்) என்று போற்றப்பட்டாள். சிதையில் அவள் உயிருடன் எரிந்து கொண்டிருந்த போது 'சதிமாதாகீ ஜெய்' என்று கூடியிருந்தவர்கள் கோசம் எழுப்பினர். உடன்கட்டைத் தீ அணையவிடாமல் 13நாட்கள் வாளேந்திய இளைஞர்களால் காக்கப்பட்டது. கடைசி நாள் பெறுமதி மிக்க புதுப்புடவை ஒன்று உடல் எரிந்த இடத்தில் விரிக்கப்பட்டு மக்கள் தொழுதனர்.

ரூப் கன்வாரின் கணவர் மால்சிங் ஒரு பட்டதாரி. திருமணம் முடிந்த எட்டாவது மாதம் உடல்நலம் பாதிக்கப்பட்ட மால்சிங் மருத்துவ மனையில் மரணமாக, ராஜ புத்திரர்களின் சந்ததி 'வழக்க'ப்படி மால்சிங்குடன் ரூப் கன்வாரும் உடன்கட்டை ஏறுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டாள்.

சமூகத்தின் மூட நம்பிக்கைக்கு பலிக்கடா ஆக்கப்பட்ட ரூப் கன்வார் தன் மடியில் தனது கணவனை வைத்தபடி எரிவதுபோல் வண்ணப் படங்கள் விற்கப்பட்டன. ஒருகோடி ரூபாவரை ரூப்



கம்ப்யூட்டர் வரைந்த ஓவியம்



பாதி உலகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கன்வாருக்கு சமாதி கட்டுவதற்கான நிதி சேகரிக்கப்பட்டது.

ரூப்கன்வார் 'சதி'யால் கொல்லப்பட்ட பின்னர் கணவன் மால்சிங் குடும்பம் கைதானது. இக்குடும்பம் விடுதலையாகும் வரை ராஜ புத்திரர்கள் தீபாவளியைக் கொண்டாடக் கூடாது என்று கோரினர்கள் சாதி வெறியர்கள். இந்தியாவுக்குச் 'சுதந்திரம்' கிடைத்த பின்பும் உடன்கட்டை ஏ(ற்)றும் கொடியமுறை தொடர்கிறது. இவ்வாறன நிகழ்வுகள் பெண்களுக்குப் பூட்டப்பட்ட கொடிய விலங்கு என்பதை உணராத பல ஆண்கள் இதை ஒரு புனிதச் சடங்காகவும், உயர்ந்த தியாகமாகவும் பார்க்கின்றனர்.

ரூப் கன்வர் தீயில் இடப்பட்ட இரண்டாவது நாள் ராஜஸ்தான் பெண்கள் அமைப்பு ஒன்று பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியது. இந்த அமைப்பின் கண்டனத்தை மாநில முதலமைச்சர் ஏற்கவில்லை. மாறாக அமைப்பினரை வெளியே அனுப்பிக் கதவைச் சாத்தினர் அந்த 'மக்கள் தலைவர்'.

உடன்கட்டையை எதிர்த்து பெண்கள்

- மைதிலி ராமநாதன்-

ஊர்வலம் நடாத்திய போது அதனை ஆதரித்து ஆண்கள் இரு தடவைகள் ஊர்வலம் நடாத்தினர். சில பத்திரிகைகளும் பொறுப்பற்ற விதத்தில் உடன்கட்டையை ஆதரித்து எழுதின. சில அரசியல் கட்சிகள் நேரடியாக உடன்கட்டையை ஆதரித்தன. ஏனையவை மௌனத்தின்மூலம் பேராதரவு வழங்கின. 'விஞ்ஞானி' ராஜீவ் காந்தி ஏறத்தாழ ஒரு மாதத்தின் பின்பே 'இது நாட்டுக்கே அவமானச் சின்னம்' என்று அறிக்கை விட்டார்.

எமது சமூகத்தில் உடன்கட்டையேறும்

**உடன்கட்டைச் 'சதி'**

பெண்கள் மறுமணம் செய்வதை அதர்வண வேதம் ஏற்றுக் கொள்கிறது. இந்துக்களின் மற்றோர் வேதமான இருக்கு வேதம் 'தாய்மாரே முதலில் மணமேடைக்கு வாருங்கள்' (அரோ ஹந்து ஜன்யோ யோனிம் அக்ரே) என்று கூறியதை; 'தாய்மாரே முதலில் நெருப்புக்குள் நுழையுங்கள்' (அரோஹந்து ஜன்யோ யோனிம் அக்னி) என்று இந்துமதப் பிதாமகர்கள் மாற்றினர். இந்த உண்மையை மாக்ஸ் முல்லர் (ஜேர்மனி) என்ற ஆய்வாளர் தனது நூலொன்றில் அம்பலப்படுத்தியுள்ளார்.

பழக்கம் தற்சமயம் இல்லையெனினும், விதவைகள் சமூகத்தில் மதிக்கப்படாமலும் தமது உயிர் வாழ்தலுக்கு வேறு யாரிலாவது தங்கி நிற்கவேண்டிய சூழ்நிலையிலும் உள்ளனர். விதவைகளை மறுமணம் செய்வதற்கும் எவரும் முன்வருவதில்லை. விதவை தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு அலங்காரம் செய்யவோ, பொது விடயங்களில் கலந்து கொள்ளவோ உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.

தற்போது எமது சமூகத்தில் நிலவும் இவ்வாறன பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எமது சமூக அமைப்பே அடிப்படைக் காரணமாகும். இந்த சமூக அமைப்பை முற்றாக மாற்றி சமூகத்தில் மனிதர்கள் அனைவரும் ஒன்றாக மதிக்கப்படும் ஒரு நிலையை உருவாக்கும் போராட்டத்தில் எமது பெண்கள் அனைவரும் தம்மையும் ஒருங்கிணைப்பது அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



● ஒருநாள் தமிழ் நண்பர்கள் இருவர் உள்ளூர்ப் புகையி(ல்லாத)ரதத்தில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். அருகிலிருந்த பெண் ஒருத்தி பயணச்சீட்டின்றிய பயணத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டாள். பரிசோதகரிடம் 'என்னிடம் சீட்டு இல்லை' என்று மிக இயல்பாகக்கூறித் தனது அடையாளம்பற்றி விளக்கமளித்துப் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொண்டாள். இச்சம்பவம் நண்பர்களிருவரையும் கொஞ்சம் வியப்பிலாழ்த்தியது. தங்கள் உரையாடல் அவள்பற்றியதாக இருப்பதை அவள் உணரக்கூடாது என்பதற்காக என்று வழமையாக ஆங்கிலத்தில் பாவிக்கும் வார்த்தைகளைத் தமிழாக்கிப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர் நண்பர்கள். இவ்வாறு ஏதாவது நெருக்கடியான சூழலில்தான் சுத்தத் தமிழ்பேசும் நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

● திரைப்படங்களைப் பார்த்து எம்மில் பலர் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறோம். திரைப்படக் கதாநாயக, நாயகிகள் அப்பாக்கள், அம்மாக்கள் என்று தமிழ்ப் படங்களில் கண்ணீர் விடவென்றே கொடுத்துப் படம் பார்ப்பவர்களுக்குக் கண்ணீரையும் இலவசமாக வழங்கி விடுவார்கள். படத்திலும் சரி, திரையரங்கிலும் சரி விடப்படும் கண்ணீரை விட வேறொரு கண்ணீர் எனது மனதை அதிகம் நெருடியிருக்கிறது. திரைப்பட நடிகர்கள் பலர் உணர்ச்சி ததும்பும் வசனங்களைப் பேசும் போது அவர்களின் வாய் அசைவில் வேறொருவர் குரலே ஒலிக்கிறதென்பது துயரம் தான். அனேக படங்களில் இந்தப் பின்னனிக் குரல் கொடுக்கும் கலைஞர்களின் பெயர்கள் கூட வெளிவருவதில்லை. நடிப்பில் உடல் அசைவிற்கு உள்ள முக்கியம் குரலுக்கும் இருக்கிறது என்பது பலரும் அவதானிக்காத ஒரு விசயம் . நடிகர் மோகன் தமிழில் அறிமுகமான நாளிலிருந்தே இரவல் குரல்தான் அவரைக் காப்பாற்றியது. மோகனின் நடிப்பையும், சுரேந்தரின் குரலையும் வேறுவேறாகக் கற்பனை செய்ய முடியாது. மோகன் புகழ்பெற்ற எல்லாப் படங்களிலும் சுரேந்தரின் குரல் பாதியோ, அதற்குமேலோ நடிப்பில் அதிக பங்கு செலுத்தியிருக்கிறது. ஆனால் எத்தனை பேருக்கு சுரேந்தரைத் தெரியும்? யாருக்கு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* உங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்கவும்,

* நகரின் மத்தியிலேயே உங்கள் பொருட் கொள்வனவைச் செய்து முடிக்கவும்,

* உங்கள் உணவுச் செலவையும், சிரமத்தையும் பெருமளவில் குறைக்கவும்



* நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் தபால் மூலம் உங்களுக்குத் தேவையான பொருட்களை உடன் அனுப்பிவைக்கிறோம். தொலைபேசி மூலமோ, கடித மூலமோ எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். மிகுதியை நாங்கள் செய்கிறோம்.

# INTER TRADERS

STENERS GATE 18

( OSLO CITY பின்புறம்)

0184 0184 OSLO 1

தொலைபேசி இலக்கம்: 02/ 176218

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒல்லாந்தர் ஆட்சிக் காலமாகிய 1638-1796 ஆண்டுகளில் இலங்கைக்கு பெருந் தோட்டங்களில் வேலை செய்வதற்கு இந்தியாவிலிருந்து இந்தியத் தமிழர்கள் கொண்டு வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 1815இல் கண்டி இராச்சியம் பிரித்தானியர் கைவசம் போனவுடன் மேலும் பல தமிழர்கள் கொண்டு வரப்பட்டனர். 1873இல் மேலும் பல தமிழர்கள் எலக்கந்துர, ஹேவாகெற்ற தோட்டங்களில் வேலைசெய்ய கொண்டு வரப்பட்டனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட பல்லாயிரக் கணக்கான இந்தியத் தமிழர்கள் வேலைசெய்யும் இடங்களில் அமைக்கப்பட்ட லயங்களில்(அறைக் குடிசைகளில்) தமது துன்பியல் வரலாற்றை இன்றுவரை தொடர்கின்றனர். இவர்கள் வாழும் லயங்கள் ஓரறையையும் ஒரு சிறு வராந்தாவையுங் கொண்டுள்ள சிறிய குடில்கள். சுகாதாரமற்ற இந்தக் குடில்களிலும் வேலைசெய்யும் காலங்களில் மட்டுமே குடியிருக்க அனுமதி வழங்கும் கொடுமை இன்றுவரை தொடர்கிறது.

இவர்களின் உடல் ஆரோக்கியம் கெட்டுவிட்டால் அல்லது ஏதேனும் வைத்திய உதவி தேவைப்பட்டால் இவர்களுக்கு ஒரு வசதியும் கிடைப்பதில்லை. அநேக தோட்டங்களில் அத்தியாவசிய மருந்துகள் இல்லாத ஆஸ்பத்திரிக் கட்டடங்களே இருக்கின்றன. கர்ப்பிணிகள் அருகிலுள்ள நகருக்கு வருவதானால் தேயிலைக் கொழுந்துகள் ஏற்றிப் பறிக்கும் ட்ரக்ரர் மற்றும் லொறிகளிலேயே எடுத்துச் செல்லப்படுவர். இதுவும் தேவையின்போது கிடைப்பது அபூர்வம். அவ்வாறு கிடைப்பினும் பாதி வழியிலேயே பிரசவமோ, மரணமோ ஏற்படும் நிலை.

கல்விகூட இன்றுவரை இவர்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. இவர்களின் குழந்தைகள் தேயிலைச் செடிகளைப் பாழாக்கிவிடக்கூடாது என்பதற்காகவும் 5ஆம் வகுப்புக்கு மேல் இவர்கள் படித்தால் சிந்திக்கப் புறப்பட்டுவிடுவர் என்ற நோக்கிலும் அமைந்துள்ள 5ஆம் வகுப்பு வரையுள்ள பாடசாலைகளே அதிகம். இவற்றிலும் மிக அனேக பாடசாலைகளில் ஓரேயொரு

இவர்களின் குழந்தைகள்
செடிகளைப் பாழாக்கிவி
என்பதற்காகவும் 5ஆம் வகுப்

## நமது தலைவிதி



www.tamilarangam.net

இவர்கள் படித்தால் சிந்திக்கப் புறப்பட்டுவிடுவர் என்ற நோக்கிலும் அமைந்துள்ள 5ஆம் வகுப்பு வரையுள்ள பாடசாலைகளே அதிகம். இவற்றிலும் மிக அனேக பாடசாலைகளில் ஒரேயொரு ஆசிரியரே பணிபுரிவது வழக்கம்.

சுதந்திரம் பெற்ற இலங்கை குடியரசாக மாறியபின்பும் இவர்களின் அவலம் கூடுகின்றதேயன்றி தீரவில்லை. இலங்கை சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு இனக் கலவரங்களால் இந்த அப்பாவி மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

வேலை செய்தால் மட்டுமே கூலி என்ற நிலையும் விடுமுறை பெறுவதற்கு அரசு ஊழியர்க்கு உள்ள சலுகை இல்லாத நிலையும் இன்றும் தொடர்கின்றன. அண்மையில் JVP தீவிரவாதிகளால் தேயிலைத் தோட்டங்கள் எரிக்கப்படுவதாலும் வேலை நிறுத்தங்களாலும் பெருமளவில் இவர்களே பாதிப்புறுகின்றனர்.

இவை யாவற்றுக்கும் மேலாக பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் இந்தியர்களா, இலங்கையர்களா, மலையகத்தினரா என ஒவ்வொரு இடங்களில் வேறுவேறு விதமாக குறிப்பிடப்படுவது வழமை. தொடர்ந்து ஆட்சிக் கட்டிலேறும் சிங்கள அரசுகள் இவர்களை திரிசங்கு நிலைக்கு தள்ளியிருக்கின்றன.

அரைகுறைப் பிரசவமான தொண்டமான்- ஜே.ஆர். ஒப்பந்தம் குறிப்பிட்ட தொகை மலையகத் தமிழர்களை இலங்கைப் பிரசைகள் ஆக்கியுள்ளது. ஆனால், இவர்கள் இன்றுவரை எந்த அடிப்படைச் சுதந்திரத்தையோ ஏனைய உரிமைகளையோ சக இலங்கைப் பிரஜைகள்போல் அனுபவிப்பதில்லை.

- குகன் -

சனத்தொகை அடிப்படையிலான விகிதாசார வேலை வாய்ப்பு, கல்வி வாய்ப்பு இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

தென்பகுதியில் நடைபெறும் JVpயின் படைச் சேர்ப்புக்கு பதிலாக மலையகத்தில் இலங்கை அரசு பெரும் தொகையிலான இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்கின்றது. இதன்மூலம் இவர்களை தமது நலனுக்காக நேரடியாகவே பலியாக்க அரசு முயல்கின்றது.

கடந்த பொதுத் தேர்தலில்கூட மலையகம் ஏமாற்றத்தையே சந்தித்தது. ஒரு தமிழ்ப் பிரதிநிதியேனும் தெரிவாகவில்லை. வாக்குரிமை பறிக்கப்பட முன்னர் 1947இல் நடைபெற்ற தேர்தலில் மலையகம் ஏழு தமிழர்களை பிரநிதித்துவப் படுத்தியது. இன்று 40 வருடங்களின் பின் அந்த சந்தர்ப்பம் நழுவிப் போய்விட்டது.

வடக்கு- கிழக்கு இளைஞர்களின் போராட்டங்கள்கூட இந்த மக்கள்மீது அக்கறை செலுத்தவில்லை. எனினும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களில் பல இளைஞர்கள் தம்மையும் போராட்டத்தில் இணைத்துள்ளனர். இன்றுள்ள மலையகத் தலைமைகள் தங்கள் நலன்களை வளர்ப்பதிலேயே அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

எது எவ்வாருக இருப்பினும் அரசியலில்- சுதந்திரம், பொருளாதாரத்தில்- சமதர்மம், கல்வியில்- முன்னேற்றம் காணப்படுதல் அவசியம்., இவர்களையும் எமது போராட்டத்தில் சரியாக இணைத்துக் கொள்வது இன்று எமது விடுதலைக்காக முன்னிற்கும் அனைத்து சக்திகளதும் பணியாகும்.

இழந்த உரிமைகளுக்காக போராடுவோம்!

பெற்ற உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்வோம்!

## அறிவிப்பு

நவம்பர் மாதம், தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூடத்தின் சமையலறையில் ஏற்பட்ட தீவிபத்து ஒன்றிஞல் இணைவுகூடக் கட்டிடம் சேதமடைந்துள்ளது. இதஞல் வாசிகசாலை, தேநீர்ச்சாலை, விளையாட்டுப் பகுதி, நூலகம் என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. தாய்மொழிக் கல்வியகம் தொய்யன் தேவாலயத்தில் தற்காலிகமாக இயங்குகிறது. புதியகட்டிடம் கிடைத்ததும் ஏனைய பகுதிகள் வழமைபோல் இயங்கும். நண்பர்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு மன்னிக்க வேண்டுகிறேம்.

இணைவுகூட நிர்வாகக் குழு

கிறிங்சோ சம்பவ எதிரொலியாக தொடர்ந்து சில வன்செயல்களும், அனுமதேய துண்டுப்பிரசுர வெளியீடுகளும் நிகழ்ந்துள்ளன. இவை எமக்கிடையே பிளவுகளைத் தூண்டுமேயன்றி ஐக்கியம் நோக்கிய முன்னெடுப்பாக அமையமாட்டாது.

பேர்கனில் சுவடுகளின் சில பக்கங்கள் போட்டோ பிரதி எடுக்கப்பட்டு பலருக்கு அனுப்பப்பட்டுள்ளன. சுவடுகள் மீது உள்ள மதிப்பைக் குறைக்கும் முயற்சியான இச்சம்பவம் பற்றி எமது அதிருப்தியை வெளியிடுகிறேம்.

சுவடுகள் தனது கருத்தை வாசகர்களுக்கு நேரடியாகவும், தெளிவாகவும் சுவடுகள் மூலமே வெளியிடும் என்பதையும், எந்தவொரு உரிமை கோரப்படாத துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடாது என்பதையும், அவ்வாருன அவசியம் சுவடுகளுக்கு இல்லை என்பதையும் தெளிவாக முன்வைக்கிறேம்.

சுவடுகள்.

www.tamilarangam.net

"இந்தச் சேனை சக்திமிக்கது. ஏனெனில் இதன் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரு உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டைக் கொண்டவர்கள். அவர்கள் ஒரு சில நபர்களினதோ, குறுகிய கும்பலினதோ தனிப்பட்ட நலன்களுக்காக அல்லாமல் பரந்துபட்ட வெகுஜனங்களினதும் முழு நாட்டினதும் நலன்களுக்காக ஒன்று சேர்ந்துள்ளனர்." -ஜெனரல் கியாப்-

டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி மாலை பேர்கன் நகரில் தமிழ் மக்களின் ஐக்கியத்தை முன்வைத்து ஈழத் தமிழர் சங்கத்தால் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது.

காலம் காலமாக எம்மிடையே நிலவி வந்த பிரிவினைகள், தமிழ்த் தேசிய இனம் எழுச்சி பெற்ற காலத்தில் உச்சம் பெற்று இயக்கங்கள் எனவும், அரசியல் கருத்து வடிவிலும் வெளிப்பட்டது. ஒரு தாயின் புதல்வர்களே ஒருவரை ஒருவர் பலியெடுக்கும் நிலைவரை இது வளர்ந்தது வேதனைக்குரியது. இவற்றுக்கு முடிவுகட்ட பேர்கனில் சிலர் முயன்றுள்ளது பாராட்டப்பட வேண்டியது.

கடந்த காலங்களில் ஐக்கியம் தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகளில் இருந்து கற்றுக் கொண்டு விட்டுக் கொடுப்புடன் செயற்படல் அவசியம்.

அமைப்புகள் தம்மிடையே ஐக்கியத்தை நாடும் இவ் வேளை ஐக்கியமானது 1) நோர்வே வாழ் தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தியாக்கும் விதத்திலும், 2) சிதைவுறும் எமது கலாசாரத்தினதும், இலக்கியத்தினதும் வளர்ச்சியை மேற்கொள்ளும் வகையிலும் 3) இலங்கையில் இன்று பல அடக்குமுறைகளுக்கு உள்ளாகும் மக்களின் உரிமைகளுக்கு எதுவித அரசியல் சார்பும் அற்ற நிலையில் சர்வதேச ரீதியில் ஆதரவு தேடலிலும் 4) தமிழ் பேசும் மக்களின் பொருளாதார சீரழிவுகளை நிவர்த்திக்க திட்டங்களை முன்வைத்தும் ஐக்கியப்பட வேண்டும்.

இவ்வாறான ஐக்கியத்தில் அரசியல் சார்போ தனிமனித அல்லது குழுநிலை ஆளுமைகளோ ஏற்படும் பட்சத்தில் ஐக்கியம் சாத்தியமற்று பிரிவினைகளே அதிகரிக்கும். எனவே இங்கு செயற்படும் அமைப்புகள் குறுகிய நலனை விட்டு பொதுவான வேலைத் திட்டம் மூலம் இணைந்து செயல்படல் வேண்டும். அமைப்புகள் மக்களுக்கு மதிப்பளித்து அவர்களுக்குச் சேவை செய்யும் நோக்கில் செயல்பட வேண்டும். பேர்கனில் தமிழர்களும் அமைப்புகளும் இதற்கு முன்னோடியாகச் செயல்படுவார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



www.tamilarangam.net



# இன்னொரு சீதக்காதியாகும் பாடகர்

சீதக்காதி என்னும்பெயர், இறந்தபின்னரும் தன்னிடம்வந்து இரந்த புலவருக்கு கொடைகொடுத்த வள்ளல் என்பதால் புகழ்பெற்றது. இசைப் பிரியர்களால் மறக்கமுடியாத பாடகர் எல்விஸ் பிரெஸ்லியும் இவ்வாறு புகழ்பெற்றுள்ளார்.

பதினைந்து வருடங்களுக்குமுன் சிறுமியொருத்திக்கு அவர் வழங்கிய பரிசு, வறுமையில் சிக்கித் தவிக்கும் இளந்தாயாக மாறிவிட்ட சிறுமியை லட்சாதிபதியாக்கவுள்ளது.

1974ஆம் ஆண்டு எல்விஸ் நடாத்திய இசைநிகழ்ச்சியொன்றுக்கு சிறுமி றெண்டா தாய் கிளெண்டாவுடன் சென்றிருந்தாள். இரண்டாவது வரிசையில் அமர்ந்து இசையை இரசித்த றெண்டாவை மேடைக்கு அழைத்தார் எல்விஸ். அவள் செல்லவில்லை. நிகழ்ச்சியின் பிற்பகுதியில் எல்விஸின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் றெண்டாவைத் தூக்கிச்சென்று அவரிடம் கையளித்தார்.

எலிவிஸ் தனது மனைவியுடன் ஏற்பட்ட மனமுறிவுகாரணமாக விவாகரத்துக் கோரியிருநித நேரமது. எல்விஸின் மகள் லிசாமேரி போல் தோற்றமளித்ததாலேயே றெண்டாவை அவர் மேடைக்கு அழைத்தார்.

சிறிதுகாலம் தனது மகளைப் பிரிந்திருந்த எல்விஸ் றெண்டாவைத் தனது கைகளில் சிறிதுநேரம் வைத்திருந்து பின் கீழே இறக்கிவிட்டு முழந்தாளிட்டு றெண்டாவைக் கைகளில் வைத்துக் கொண்டு அவளது விழிகளை நோக்கியபடி அன்றைய நிகழ்ச்சியின் கடைசிப் பாடலைப் பாடினார். பாடல் முடிந்ததும் தனது தோளிலிருந்து நீலப்போர்வையைக் கழற்றி றெண்டாவை மூடிவிட்டு அவளது கன்னத்தில் முத்தமிட்டார்.

தாயிடம் றெண்டா திரும்பியபோது எங்கிருந்தோ வந்த பெண்ணொருத்தி அவளுக்கு எல்விஸ்கொடுத்த பரிசைத் தட்டிக்கொண்டு சென்றுவிட்டாள். பார்வையாளர்களுடன் தானும் அதிர்ச்சியடைந்த எல்விஸ் றெண்டாவை மீண்டும் மேடைக்கு அழைத்தார். தன கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த நெக்லசை கழற்றி அவளுக்கு அணிவித்துவிட்டு 'இது உன்னுடையது இதை உன்னிடமிருந்து யாரும் பறிக்கமுடியாது' என்று உறுதியளித்தார்.

www.tamilarangam.net



மூன்று வருடங்களின்பின் எல்விஸ் மரணமானபோது 32அங்குல நீளங்கொண்ட இந்த நெக்லஸ் 70 000 ஸ்டேர்லிங்பவுணுக்கு விலைபேசப்பட்டது. ஆனுல் றெண்டாவின் தாய் விரும்பாததால் விற்பனை கடைபட்டது.

இன்று அதே நெக்லஸ் இளந்தாயாகிவிட்ட றெண்டாவின் பொருளாதார நெருக்கடியால் ஏலத்துக்கு விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஏலத்தில் இந்த நெக்லஸ் எல்விஸ் பிரியர்களால் மிகஅதிக விலைகொடுத்து வாங்கப்படும் . என நம்பப்படக்காரணம், 1960 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 14வருடங்கள் எல்விஸ் இதை அணிந்திருந்ததே. இது முப்பது இலட்சம் ஸ்டேர்லிங் பவுண்வரை விற்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது.

எல்விஸின் நெக்லசைத் தான் இழப்பதை விரும்பாத றெண்டா, விற்பது தவிர்க்க முடியாத ஒன்று என்று தெரிவித்துள்ளார். இது எல்விஸ் வழங்கிய கொடை எனக் கருதும் றெண்டா, இன்று எல்விஸ் உயிரோடு இருந்தாலும் தனது பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க இந்த வழியை ஏற்றிருப்பார் என்று கூறுவதோடு தனது மனதில் எல்விசை இன்றும் நன்றியோடு நினைவுகூர்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

- சி.ஜெகன் -



பெருமியாக நெக்லசுடன் றெண்டா



இளம் தாயாக றெண்டா

www.tamilarangam.net

# பேர்கனில் கலாசார விழா



கடந்த ஐப்பசி மாதம் ஆறும் திகதி பேர்கன் நகரில் ஈழ மாணவர் சங்கமும், பேர்கன் தமிழ்ச் சங்கமும் நடாத்திய கலாசார விழாவினைப் பற்றிய எனது பார்வையை இங்கே முன்வைக்கிறேன்.

இவ் விழாவில் சிறுவர்களின் கோலாட்டம், பரத நாட்டிய நிகழ்ச்சி, நோர்வே மொழி நாடகம், கீழைத் தேச சங்கீதத்தின் வெளிப்பாடாகவுள்ள 'டொல்க்கி' என்னும் வாத்தியக் கருவியின் இசை வெளிப்பாடு பற்றிய விளக்கம், நாட்டுக் கூத்து என்பன மேடையேற்றப் பட்டன.

இதில் சிறுவர்கள் கோலாட்டம், பரத நாட்டிய நிகழ்ச்சி என்பன ஏற்கனவே பல மேடைகளில் மேடையேற்றப் படுவது போலவே அமைந்திருந்தது. நோர்வே மொழியில் தயாரித்த நாடகமும் எமது புராணக் கதையை மையமாக வைத்தே தயாரிக்கப் பட்டிருந்தன.

கிருபாகரன் 'டொல்க்கி' என்னும் வாத்தியக் கருவி மூலம் இசை வெளிப்பாடுகளை எப்படிச் செய்வது என்பதனை விளக்கி காட்டும் முகமாக ஒரு நிகழ்ச்சி அமைந்திருந்தது. இது ஒரு நல்ல வெளிப்பாடாக இருந்த போதிலும் இவருக்கு போதிய ஒத்துழைப்பு, நேரம் என்பன வழங்கப்படாததால் அவரது முயற்சியில் சில ஈடாட்டம் ஏற்பட வாய்ப்பாகிவிட்டது. எனவே இனி வரும் காலங்களில் இவ்வாறன ஒரு நிகழ்ச்சியை ஏனைய சில பக்க வாத்தியங்களை இணைத்து உரிய கால அவகாசத்துடன் மேடையேற்ற முன்வருவது அவருக்கு நன்மையாகவும், பயனுள்ளதாகவும் அமையுமென நம்புகிறேன்.

இறுதியாக 'கோலியாத்தும் டேவிட்டும்' என்ற நாட்டுக் கூத்து மேடையேற்றப் பட்டது. இது நல்ல முயற்சி என்பதுடன் பலராலும் மறக்கப்பட்ட நிலையில்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலைத்தேச இசை - நடன வடிவங்களில் மூழ்கியுள்ள எம்மத்தியில் எமது பாரிய கலை வெளிப்பாடான நாட்டுக் கூத்து இங்கு மேடையேற்றப் பட்டது பாராட்டப் படவேண்டியதே. நாட்டுக் கூத்தில் 'பாட்டு' என்பது ஒரு முக்கிய பகுதி. ஆனால் இங்கு இதனை மேடையேற்றியவர்கள் இப்பகுதியில் கவனம் செலுத்தத் தவறியதை பல கட்டங்களில் காணமுடிந்தது. இனிவரும் காலங்களில் இது கவனிக்கப்பட வேண்டும். இல்லாவிடின் நாட்டுக் கூத்து வடிவம் இழந்து விட வாய்ப்பு உண்டு. அத்துடன் ஒலி வாங்கிக் கருவிகள் சரியாக அமைக்கப்படாததால் சம்பாசனைகளைப் பார்வையாளர்கள் சீராகக் கிரகிக்க முடியவில்லை. அதேபோல் நாட்டுக் கூத்தில் முக்கிய விடயம் காட்சி. இங்கு திரை உரிய காலங்களில் அதன் தேவையை மேற்கொள்ளத் தவறுவதால் பல இடங்களில் காட்சி அமைப்பு உருவம் மாறிவிடுகிறது. மொத்தத்தில் இவ்வாறான தவறுகளுக்கு மத்தியில் இம் முன்முயற்சி பாராட்டப்பட வேண்டியதே.


இனி வரும் காலங்களில் எமது சமூகத்தின் சூழல்களை வெளிப்படுத்தும் முகமான கதைகளைக் கொண்ட நாட்டுக் கூத்து வடிவங்களை மேடையேற்ற இவ் வெளிப்பாட்டாளர்கள் முன்வர வேண்டும். அத்துடன் மேற்படி தவறுகளைக் களைந்து உரிய கால அவகாசத்தில் தம்மைத் தயார்ப்படுத்தி ஒரு நல்ல கூட்டு முயற்சியாக நாட்டுக் கூத்தினை வெளிக்கொணர மேற்படி கலைஞர்கள் முன்வர வேண்டும் என அவாவுறுகிறேன். அதேவேளை இவ்வாறான மறைந்து வரும் எமது கலைகளை முன்னெடுக்க பேர்கன் மாணவர்கள், பேர்கன் தமிழ்ச்சங்கம் முயற்சி எடுத்தது போன்று நோர்வேயில் உள்ள ஏனைய பொது அமைப்புகளும் இவ்வாறான கலைஞர்களை, கலைகளை வெளிக் கொணர்வதில் முனைப்பெடுக்க வேண்டுமென விரும்புகிறேன்.

ஜீவன்.

www.tamilarangam.net

டிசம்பர் மாதத்தில் தான் அதுவரும். அந்தக் காற்று. அந்தக் காற்று எப்படி வருமென்ருே, எப்பொழுது வருமென்ருே யாருக்குந் தெரியாது. ஆனுல், திடீரென ஒருநாள் கோவில் ஆறு மணிப் பூசை முடிந்து திரும்புகின்ற பக்தர்கள் அதை உணருவார்கள். பக்தர்கள் என்ருல் பக்தகோடிகள் குழாமல்ல. ஒரு 25 அல்லது 30பேர். அதுவும் பிரசாதத்துக்கு நிற்கும் ஆறு பேர் தவிர. இவர்கள் தினமும் கோவில் மண்டபத்திலேயே படுப்பவர்கள். இவர்கள் பிச்சைக்காரர்கள் அல்ல. பிரசாதத்துக்கு நிற்பவர்கள் போல் பாவனை செய்பவர்கள். இந்த ஆறு பேரில் மூன்று பேர் 'குடிகாரன்' என்ற ஞான ஒளியைச் சுமப்பவர்கள். இவர்கள் அதிகமாகக் குடிப்பவர்களல்ல. சுமத்தப்பட்ட சுமைக்கு நேர்மையாக வாழ்பவர்கள். ஏனைய மூன்று பேரில் இரண்டு பேர்களும் ஒரு சிறுவனும் அடங்குவர். இரு பெண்களில் ஒரு கிழவி, ஒரு விதவை. கிழவிக்கும் விதவைக்கும் அதிகளவு தூரம் பேதமில்லை. நரைத்த தலைமுடியைத் தவிர. போக்கிடமில்லை. ஆதலால் அம்பாளே தஞ்சம். சிறுவன் 14 வயதிருக்கும். 8 வயதுவரை ஒழுங்காகப் படித்தவனும். 8 ஆவது வயதில் காதினுள் குண்டுமணியை ஒட்டியதால்– 'ஒப்பரேசன்' செய்தபொழுது மூளை நரம்புகளை வைத்தியர் மாறிப் பொருத்தியதால் ஆறு வருடங்களாக 'பைத்தியம்' அல்லது 'விசர்' என்ற பட்டத்தைச் சுமப்பவன்.

அம்மன் கோவிலின் முன்வீதி முடியும் இடத்தில் பிரதான தெரு செல்கின்றது. பிரதான தெருவில் போகும் பஸ்களுக்கு 'அம்மன் கோவில்' என்பதும் ஒரு 'கோல்றிங் பிளேஸ்' வீதியின் மருங்கிலும் தெருவின் ஓரத்திலுமாய் ஒரு அரச மரம்.



www.tamilarangam.net

60 வருடமாய் அது நிற்கிறதாம். கோவிலிலிருந்து 4மைல் தூரத்திலிருந்து எண்ணெய் வியாபாரம் செய்பவர் - ஒரு அம்பாள் பக்தர் அதை நாட்டியதாக ஒரு ஐதீகம்.

அரச மரமென்ருல் அதுதான் மரம். சங்கமித்தை கொண்டுவந்த வெள்ளரச மரத்தை ஒருத்தரும் பார்க்கவில்லை என்ருலும் கற்பனையில் ஒரு வெள்ளரச மரம் தோன்றுமே... அதைப் போல் ஒரு அழகான மரம். இந்த மரத்திலிருந்து அரசம் பழுத்தல்... ஆறுமணிப் பூசை முடிந்து வீடு திரும்பும் பக்தர்கள் மேல் விழுந்ததோ அன்றைக்கு அந்தக் காற்றுத் தொடங்கி விட்டதென்று அர்த்தம்.

0 0 0

வேலுப்பிள்ளையராலை இனி நித்திரை கொள்ள முடியாது. ஏனென்ருல் அதிகாலை 4.30 மணிக்கு அடிக்கிற பிள்ளையார் கோவில் மணியடிச்சாச்சு. வீட்டில் படுத்திருக்கிற மனைவி, பிள்ளைகள் எல்லாரையும் ஒவ்வொருத்தரா எழுப்பி அவரவர் காரியங்களுக்கு விடவேணும். புதுநாள் தொடங்குகின்றது. ஒவ்வொரு நாளையும் அவருக்கு விடியும்பொழுது புதுநாளாகவும் முடியும் பொழுது ஒரு சாதாரண நாளாகவும் முடியும். முதலில் தானெழும்பிச் சப்பாணங் கட்டிக் கொண்டிருப்பார். பிறகு மனைவி, ரகுநாதன், இந்திரா, சந்திரா என்று நீண்டு கடைசிப் பையன் மகேசனில் வந்து ஓயும் அவரது கூப்பாடு. மார்கழிப் பின்னிரவில் குளிருடன் போர்த்தியபடி உறங்கும் மனைவி ஈஸ்வரி எப்படியும் முணுமுணுப்பில்லாமல் எழும்பியாக வேண்டும். பிள்ளைகள் எப்படியும் முணுமுணுத்த பின்தான் எழும்புவார்கள். என்னதான் இருந்தாலும் வேலுப்பிள்ளையற்ற சட்டத்தை ஒருவராலும் மீறமுடியாது. அந்தக்காலத்து வெள்ளைக்காரன்ரை இங்கிலீசிலை படிச்சுப் பின் படிப்படியாக 'சீவ்கிளார்க்'காக வேலை பார்த்தவர். எத்தனையோ 'பீயோன்களை'க் கட்டி மேய்ச்சவர். அவருக்கு 'ரைம் எண்டா ரைம்'தான்.

அவராவது முதலாவது 'அற்ருக்' ஈஸ்வரி முடிந்து இரண்டாவது 'அற்ருக்' ரகுநாதனிலை தொடங்குகிறது.

"எழும்படா! இனிக்காணும். அப்படி என்ன நித்திரை. ஓடிப்போய் கோயிலடியில அரசம் பழுத்தல்கள் ஏராளங் கொட்டுண்டு கிடக்கு பொறுக்கியந்து அந்த ஆடுகளுக்குப் போடன். எழும்பு! எழும்பு! அந்த செகிட்டு மாணிக்கத்தின்ர பெடியள் அள்ளிக்கொண்டு போப்போகுது.

அதுகள் எங்கையெண்டிருக்குங்கள் எழும்படா, ரகு... ரகு... ரகுநாதன்... ரகுநாதன்... மணி ஐஞ்சாச்செல்லே..."

போர்வையை முகந்தெரிய நீக்கல்... இரண்டு கைகளையும் நேரே மேலே உயர்த்தி நெட்டி முறிய ஒரு முறிப்பு... பின். இடதுபக்கம் திரும்பி ஐந்து செக்கன் படுத்தல்..-. கைகளைப் போர்வையுள்ளும் சாரத்தினுள்ளும் விட்டுத் தொடைகளில் ஒரு சொறியல்... பிறகுதான் "ம்ம்.." என்ற முனகல் பிறக்கும் ரகுநாதனிடமிருந்து.

எப்படியோ ஒருவாறு எழுந்து முகத்தைத் துடைத்து விட்டுக் கோயிலடியை நோக்கி ஓட்டமும் நடையுமாய் செல்வான். பல தடவை அப்படிச் செல்லும்போது 'ஆடுகளுக்குப் பாம்பு கடிக்குமோ, கடிச்சால் சாகுமோ' என்ற யோசனை தான் அவனுக்கு வரும். சிலவேளைகளில் அந்தப் பனியும் அதிகாலையில் சோவென்று அரச மரத்திலிருந்து இலைகள் அடிபட்டுப் பழுத்தல்கள் விழுவதும் ஆனந்தமாக

www.tamilarangam.net

இருக்கும். செகிட்டு மாணிக்கத்தின்ர பெடியள் பெரும்பாலும் பிந்தித்தான் வருவாங்கள். இவன் அரைக் கடகம் நிறைக்கும் பொழுதுதான் அவை வருவினம். தெருவோரத்தில் அணிஞ்சில் மரத்துக்குக் கீழே இருக்கிற மைல் கல்லடியில் இவன் மூத்திரம் பெய்யச் சுணங்கினானென்றால் இவனுக்குக் காவாசிக் கடகம் நட்டம். பெரும்பாலும் மூத்திரத்தை அடக்கிக் கொண்டுதான் அரசம் பழுத்தல் பொறுக்குவான். ஒருகடகம் நிறைய பழுத்தல்களை தலையில் சுமந்து கொண்டுவந்து ஆடுகளுக்கு அளவளவாகப் பிரிச்சுத் தீனிபோட்டு, கைகால் அலம்ப மணி கிட்டத்தட்ட ஆறே முக்கால் ஏழு மணியாகும்.பிறகு பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிடுகிற வேலையைப் பார்க்கவேண்டியதுதான். அப்பொழுது ரகு grade 9 படிச்சுக்கொண்டிருந்தான். படிப்பில் ஆகத் திறமெண்டுஞ் சொல்லேலாது. ஆகக் கழிவெண்டுஞ் சொல்லேலாது. சுமார்தான். ஆனால், chemistry படிப்பிக்கிற பொன்னம்பல மாஸ்டரைக் கண்ணில காட்டேலாது. பொன்னம்பலத்தார் பிள்ளையளுக்கு அடிக்கிறதுக்காகச் சம்பளம் வாங்குறவர் எண்டுறது ரகுநாதனின் கணிப்பு. படிப்பிக்கிறது எண்டது அவரைப் பொறுத்த வரையில் இரண்டாம் பட்சத் தேவையாகத்தான் இருந்தது. பொன்னம்பலத்தாரிலை வெறுப்பு வந்ததுக்கு முக்கியமான காரணம் என்னெண்டா 8ஆம் வகுப்பு ரகு படிக்கேக்கை இவர்தான் கிளாஸ் மாஸ்டர். அவர்தான் திடீரென வகுப்பிலை இருக்கிற அத்தனை பிள்ளையளும் ஒவ்வொருத்தரா

( தொடர்ச்சி 44ம் பக்கம்.)

## கூழ்முட்டை ஓவியம்

பல வர்ணங்கள்
பல வடிவங்கள்
நிறைய தலைகள்
நிறையவே கை, கால்கள்.

நாங்கள்
வரைந்த ஓவியம்
புதினமானதும், நூதனமானதும்;
நவீனமானதும் கூட.

சிரமப்பட்டு
மிக மிகச் சிரமப்பட்டு
ஓவியம் வரைந்தோம்

என்ன செய்வது..?
கூழ் முட்டையின் ஓட்டில்
ஓவியத்தை வரைந்தோம்
தவறு எம் மேல்த்தான்
இப்போது உடைந்துவிட்டது
சகிக்க முடியவில்லை
நாறுகிறது.

கைகள், கால்கள்,
தொட்டஇடம்,பட்டஇடம் எல்லாமே
நாறுகிறது.

தமயந்தி.

www.tamilarangam.net




கடந்த ஆவணி மாத இதழில் 'ஜனகன்' ாழுதிய கல்வியும் தமிழ்மாணவர் போராட்டமும் என்ற கட்டுரை ஓர் ஆரோக்கியமான விடயத்தை அலசிப் ார்க்கவும் இது தொடர்பாக ம்மிடையேயுள்ள குறைநிறைகளைப்பற்றிக் கருத்துப் பரிமாறவும் நல்ல அடித்தளமிட்டுள்ளது.

ட்டுரையாசிரியரின் கருத்துக்கும் னக்கும் பெரியளவில் முரண்பாடுகள் இல்லை. ஆசிரியர் எமது கல்விநிலையில் இருக்கும் குறைபாடுகளையும், எம் த்தியில் தோற்றம் பெற்ற மாணவ அமைப்புகளின் சிந்தனைத் தெளிவற்ற செயற்பாடுகளையுமே எடுத்துக்காட்டியிருந்ததுடன், மாணவ அமைப்புகள் சர்வதேசச் சூழலில் தமது கடமைகளை எவ்வாறு செய்யவேண்டுமென்ற கருத்தமைவுடனும் கட்டுரையை முடித்திருந்தார். இந்நிலையில் ஆசிரியர் தற்போதைய சூழலில் இலங்கையில் செயற்படும் மாணவ அமைப்புகளின் செயற்பாடுகளையும் ஆராய முற்படாதது கட்டுரையைப் பூரணப்படுத்தத் தவறிவிட்டது.


இக்கட்டுரை தொடர்பாக என்னுடன் கருத்துப் பரிமாறியவர்கள் இருவிதமான கேள்விகளை முன்வைத்தனர்.

1) தற்போதைய சூழலில் (தேசியவிடுதலைப் போராட்டம் நடக்கும் நிலையில்) மாணவ அமைப்புகள் விடுதலையமைப்புகளின் கீழிருந்து செயற்படாது சுயாதீனமாக இயங்குவது சரியா?

2) இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் என்போர் யார்?

எனவே நான் இவ்விரு கேள்விகளின் தொடர்பாக எனது கருத்துகளைப் பகிர விரும்புகிறேன்.

முதற் கேள்வியை நாம் நோக்குமிடத்து இனவாதம் உச்சம்பெற்ற காலந்தொட்டுப் போராட்டத்தினை ஆயுதவாத நடவடிக்கைகளே தலைமையேற்றுச் செயற்படுத்தி வருகின்றன. இந்



## ஆயிரம் பூக்கள் மலரட்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடவடிக்கைகள் பல்வேறுபட்ட கருத்தமைவுகளின் அடிப்படையில் பல்வேறு வடிவங்களில் எமது பிரதேசங்களில் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளன. இதன் வடிவங்களாகவே பல அமைப்புகள் தோற்றம்பெற்றுச் செயற்பட்டுவந்தன. ஆனால், இவை எவையும் மக்கள் மத்தியில் ஸ்தாபனவடிவம் பெறவில்லை. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள சாதி, சமய, வர்க்கபேதங்களுக்கு அப்பாலோ, பிரதேசபேதங்களுக்கு அப்பாலோ மக்கள் மத்தியிலுள்ள பொதுநல அமைப்புகளை, மக்கள் மன்றங்களை, தொழிற்சங்கங்களை ஒருங்கிணைத்த ஒரு ஸ்தாபனம் அமையவில்லை. பதிலாக, இயக்கங்கள் யாவும் பேரினவாத உச்சநிலையால் ஆயுதம் தலைமையேற்றுள்ள நிலையில் அதன் ஆணையிலேயே இவ்வமைப்புகளை கட்டுப்படுத்த முனைந்திருந்தன. இதனால் சுதந்திரமாக, மக்களின் பிரதிநிதிகளாகக் கருத்துப் பரிமாறவேண்டிய பலர் ஊமைகளாக்கப்பட்டனர். இவ் வழியேதான் தமிழ் மாணவர்களும், பத்திரிகைகளும் வழிநடத்தப்பட்டனர்.

ஒரு சமூகத்தில் மாணவ சமுதாயம் என்பது ஜீவநாடியாகும். மாணவ சமுதாயம் தனது சமூகத்தின் சூழலைக் கருத்திற்கொண்டு புதிய வழிகாட்டலுக்கான கருத்துகளை முன்வைத்து செயற்படும். இதன்மூலம் புதிய தலைமைகளையும், சமூக - பொருளாதார மாற்றத்துக்கான வழிகாட்டலையும் முன்வைத்துச் செயற்படும். சர்வதேச அரங்கில் நடந்த போராட்டங்கள் யாவும் மாணவர்களால் இவ்வாறே ஆரம்பிக்கப்பட்டன. லெனினும் மாணவர்களைப் பார்த்து "கற்பதற்காகப் போராடுங்கள்; போராட்டத்துக்காக கல்வி பயிலுங்கள்" என்றார். இதன் காரணம் மாணவர்கள் சமூகத்தின் புதிய பரிணாமங்களை மேற்கொள்ளும் ஜீவசக்திகள் என்பதே. ஆனால், எம்மிடையே ஆரம்பகாலந்தொட்டு மாணவ சக்திகள் அரசியல் தலைமைகளாலும், ஆயுதவாதம் பொருந்திய அமைப்புகளின் கட்டுப்பாட்டிலுமே வழிநடத்தப்பட்டு வந்துள்ளன. இதனால் தான் மாணவ சக்திகள் தாம் சார்ந்த அமைப்புகளுக்கு ஊதுகுழலாக மாறவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலை மாறி மாணவ சக்திகள் "தேடல் - உருவாக்கல்" என்ற நிலைக்கு மாறவேண்டும். இன்றைய இலங்கைச் சூழல் மாணவர்களுக்கு ஏதுவாக அமையமுடியாதவாறு ஆயுத ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இத் துர்ப்பாக்கிய காலகட்டத்தில் தாய்மண்ணைவிட்டு வெளியேறிப் பல நாடுகளில் வாழும் மாணவர்கள் ஓரணியில் திரண்டு எமது சமூகத்தின் இருண்ட வாழ்வுக்கு ஒளியேற்ற முற்படவேண்டும். இவர்கள் தமிழ்பேசும் மக்களின் இன்றைய சூழலைக் கருத்திற்கொண்டு சமூக - பொருளாதார மாற்றத்துக்கான புதிய வழிகாட்டலை மேற்கொள்ள முற்படவேண்டும். இதற்காக சர்வதேச அரங்கில் உள்ள எமக்கு ஆதரவான, எமது உரிமைக்காகத் தோள்கொடுக்கக்கூடிய நேசகர சக்திகளை அடையாளங்கண்டு அணிதிரட்ட முற்படவேண்டும். எமது மக்களின் நலன்களை கருத்திற்கொண்டும் ஏனைய நேசகர சக்திகளுடன் கருத்துப் பரிமாறுவதூடாகவும் எமது போராட்டத்தையும் அதன் தேவைகளையும் நாம் உணர்ந்து செயற்படமுடியும்.

இரண்டாவது கேள்வியில் சூழ்நிலை காரணமாய் இடம்பெயர்ந்து வாழும்

www.tamilarangam.net

எம்மிடையேயுள்ள வேற்றுமைகளின் வடிவமே தெளிவாகத் தெரிகிறது. இனவாதம் உச்சம்பெற்று, ஆயுத நடவடிக்கை அதிகரித்த நிலையில் இலங்கையில் தமிழ் மாணவ சமுதாயம் பலமாகப் பாதிக்கப்பட்டது என்பது வரலாற்றுண்மை. இப்பாதிப்புக்குச் சிங்களப் பேரினவாத அரசு செய்த முயற்சிகளுக்கு எமது விடுதலையமைப்புகளின் செயற்பாடுகளும் துணைபோகும் நிலையிலேயே இருந்தமை எமது சமூகத்தின் துர்ப்பாக்கிய நிலையே. இந்நிலையில் கல்வியிழந்து தம்முயிரைத் துச்சமாக மதித்து ஆயுத எழுச்சியில் அணிதிரண்டவர்கள் ஒருபுறமும், மறுபுறம் தம்முயிரைப் பாதுகாக்கப் பிறந்த மண்ணைவிட்டு வெளியேறியுமுள்ள எமது இளைஞர் சமூகத்தில் மாணவர்கள் யார்? அகதிகள் யார்? இளைஞர்கள் யார்? என்பது மிக விசித்திரமான கேள்வியே. ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக நோர்வே, இங்கிலாந்து போன்ற நாடுகளில் மாணவர்கள் – அகதிகள் என்ற பிரிவினையில் எமது இளைஞர் சமுதாயம் பிளவுபட்டிருப்பதை சமூகநலனில் அக்கறையுள்ள எவரும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. எம்மவர் இங்கு பொருளாதாரச் சுமையின் காரணமாக அல்லது சூழ்நிலையின் காரணமாகத்தான் வாழ்கின்றனர். இப்படி வந்துசேர்வதற்கான வழிகளிலொன்றே மாணவர் என்ற மார்க்கம்.

நோர்வேயில் மூன்றும் உலக நாடுகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் உதவிகளின் அடிப்படையிலேயே பொதுவாக வெளிநாட்டு மாணவர்களின் வருகை அமைந்திருந்தது. இலங்கையில் நிகழும் போராட்டத்தின் விளைவாக எமது

(41ம் பக்கத்தொடர்ச்சி)

எழும்பி அவரவற்றை சாதி என்னெண்டு சொல்லிப் போட்டு இருங்கோ எண்டார். எப்படியோ எங்களை அறியாமல் எங்களைத் தொற்றிக் கொண்ட சாதிகளை எல்லோரும் என்னெண்டு சொல்லுவினம். அதுவும் அப்பா காலையிலை சொன்னுரே செகிட்டு மாணிக்கம். அந்த மாணிக்கத்தின்ர இரண்டாவது மகனும் ரகுவும் கூடப் படித்தவர்கள். அவன் எழுந்துநின்று... மிரள மிரள... விழித்து...

பெண்கள் பக்கத்தை ஒருதடவை நோட்டம்விட்டு... வாயில் உமிழ்ந்தபடி...

அவன் சொன்னுன் – நாங்கள் மரமேறுற ஆக்கள்– எண்டு. *(தொடரும்)*

மக்களின்மேல் சர்வதேச அளவில் எழுந்த மனிதாபிமான ஆதரவின் வெளிப்பாடாக நோர்வேயில் அதிகளவில் தமிழ் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதேவேளை சிங்களப் பேரினவாத அரசால் எம்மீது தொடுக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கையால் எம்மவர் பலர் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக வரத்தொடங்கினர். ஐரோப்பிய நாடுகளுக்கு இவ்விரு சாராரின் வருகையும் சூழ்நிலை காரணமாகவே அமைந்திருந்தது. எப்படிப்பட்ட வழியில் இங்கு வந்தாலும் கல்வி பயில எல்லோர்க்கும் உரிமையளிக்கப்பட்டது. ஆனல், மாணவராகவே வந்தோர் தமது இருப்பை உறுதிசெய்யப் படிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதுபோல் அகதிகளாக வந்தோர்க்கு ஏற்படவில்லை. இதனல் அகதிகளாக வந்தோர் பலர் தமது பொருளாதாரச் சுமைகளின் காரணமாகப் பணம் சம்பாதிக்கும் கட்டாயத்தில் சிக்கிவிடுகின்றனர். இதேவேளை மாணவர்களாக வந்தவர்களும் கல்வி

www.tamilarangam.net

* சுவடுகளில் வெளியாகும் படைப்புக்களில் உள்ள கருத்துக்கள் படைப்பாளிகளின் கருத்துக்களே. இக் கருத்துக்கள் சுவடுகளின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

● சுவடுகள்.

பயிலுதல் என்ற போர்வையில் நாம் எதைக் கற்கிறோம்; ஏன் கற்கிறோம்; இதன் தேவையென்ன என்ற கேள்விகளுக்கு விடையில்லாத நிலையில் தமது இருப்பை உறுதிசெய்யும் ஊடகமாகக் கல்வியை ஆக்கிக்கொண்டதுடன் இவர்களும் பொருளாதார சுமையின் காரணமாக பணமீட்டுவதிலேயே குறியாகவுள்ளனர். இந்நிலையில் இவ்விரு பிரிவினருமே எமது சமூகத்தில் ஒரே வர்க்கத்தினர்தான்.

இக் கட்டத்தில் இவ்விளைஞர் சமுதாயத்தைப் பிளவு படுத்தாது ஒருங்கிணைத்து, எமது சமூகத்தின் உயிர்ப்புள்ள சக்தியாக மாற்ற வேண்டிய கடமை தமிழ்ச் சமூகத்தின்பால் அக்கறையுள்ள ஒவ்வொருவரின் கடமையுமாகும். இதை விடுத்து மாணவ அமைப்புகள், மாணவ பிரிவுகள் என நம்மைப் பிரிவுபடுத்திக் காட்ட ஊடகங்கள் தேட மாணவர்கள் முற்படுவார்களானல் எமது சமூகம் பிரிவுபடுமேயொழிய, ஒன்றிணைய வாய்ப்பில்லை. அத்துடன் வெறும் புத்தகப்படிப்புகளையும், கல்விக் கூடங்களையும் அடைபவர்கள்தான் மாணவர்கள் என்ற மாயை எம்மில் மாற வேண்டும். விஞ்ஞான தொழில்நுட்பங்களை தொழிற்பயிற்சித் திட்டங்கள் மூலம் படிப்பவர்கள், சமூக பொருளாதாரக் கட்டுமானத்தின் தேவைகளின் அடிப்படையில் செயற்படுபவர்களும் கலை–கலாசார ஊடகங்களைப் பாதுகாக்கவும் அதன் வளர்ச்சிக்காகப் புதிய பரிணமங்களை மேற்கொள்பவர்களும் கூட மாணவர்களே. மாணவர்களாக உள்ளவர்கள் இங்கு சூழ்நிலை காரணமாகச் சிதறியுள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களையும் எமது மக்களின், தேசத்தின் தேவைகளின் அடிப்படையில் மாணவர்களாகப் பரிணமிக்க வழிசமைத்துச் செயற்படல் அவசியம். குழுநிலை வாதம், பிரதேச வாதம், பழமை வாதங்களைத் தவிர்த்து எமது சமூக மாற்றத்தின் தேவை கருதி ஒன்றிணைந்து செயற்படுவதுடன், சர்வதேசச் சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்து ஏனைய ஆதரவு சக்திகளை, மனிதாபிமான சக்திகளை அணிதிரட்டும் வகையில் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இவையே நாம் இன்று இவ்விடங்களில் செய்யவேண்டிய முக்கிய பணிகளாகும். இவற்றைச் செய்வதினூடு எமது சமூகத்தின் ஐக்கியத்திற்கும் விடிவிற்கும் குரல் கொடுப்போம்.

டி.தேவராஜ்
ஸ்தவாங்கர்

www.tamilarangam.net

# 'ஜனநாயக வழிகளை ஏற்றுக் கொண்டால் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும்'

இலங்கைப் பாராளு மன்ற உறுப்பினர் திரு. க. பிரேமச்சந்திரன் (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி) இங்கு வந்தபோது அவர் எமக்களித்த பேட்டியை வாசகர்களுக்காக தருகின்றோம். குறைந்தளவு நேரமே பேட்டிக்காக ஒதுக்கித் தரப்பட்டது. இந்த நேர அவகாசத்திலும் பேட்டியைச் சிறப்பாக வடிவமைக்க நாம் எம்மால் இயலுமானவரை முயன்றோம். பேட்டி நடத்தப்பட்ட போது திரு. எல்.கேதீஸ்வரன்(பேச்சாளர்), லண்டனிலிருந்து வருகை தந்திருந்த திரு. சாந்தன் ஆகியோர் உடனிருந்தனர். இப் பேட்டி ஒக்டோபர் மாதம் 14ம் திகதி எடுக்கப்பட்டது.

சுவடுகள்:- டிசம்பர் 31க்கு முன் இந்தியப் படைகள் விலக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்:- இந்திய- இலங்கைக் கூட்டறிக்கையிலேயே இந்தக் கருத்து வெளிவந்துள்ளது. இக் கூட்டறிக்கை பல பிரிவுகளைக் கொண்டது. கடைசிப் பிரிவிலேயே படை விலகல் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் கூட்டறிக்கையை வாசிக்கும் ஒவ்வொருவரும் அதில் தமக்குரிய விளக்கத்தைக் கொடுக்கலாம்.

கூட்டறிக்கையின் ஒரு பகுதியில் 'மாகாணசபை பலப்படுத்தப்பட வேண்டும், அதற்குரிய அதிகாரங்கள்(பொலீசை உருவாக்குவது உட்பட) வழங்கப்பட வேண்டும். இவை நடந்தால் இந்தியப் படைகள் டிசம்பர் 31க்கிடையில் முற்றாக இலங்கையை விட்டு வெளியேற சகல முயற்சிகளையும் எடுப்பர்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. கூட்டறிக்கையில் கடைசிப் பிரிவை மட்டும் வாசிப்பவர்கள் இந்தியப் படைகள் வெளியேறும் எனக் கூறலாம்; கூட்டறிக்கையை முழுமையாக வாசித்து இலங்கையரசோ, இந்திய அரசோ, நாமோ வெவ்வேறு விளக்கங்களைக் கொடுக்கலாம். கட்டாயம் இந்தியப்படைகள் வெளியேறுமா என்பது எங்களுக்குத் தெரியாது.

சுவடுகள்:- இந்தியப் படைகள் வெளியேறுவதாகக் கொண்டால் தற்போதைய அரசியற் சூழ்நிலை எவ்வாறு மாற்றமடையும் என எதிர் பார்க்கின்றீர்கள்?

பதில்:- கூட்டறிக்கையின்படி அமைதிக்குழு உருவாக்கப்பட வேண்டும். இக் குழுவில் சகல தமிழ்க் குழுக்களும் பங்குபற்றுமென எமக்குக் கூறப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி இந்த அமைதிக் குழுவுக்கு விடுதலைப் புலிகளைக் கொண்டுவருவது தனது கடமை எனக் கூறியிருந்தார். விடுதலைப் புலிகள் இல்லாத இத்தகைய அமைதிக்குழு அர்த்தமற்றதென எமக்கு விளக்கப்பட்டது. இக்குழுவின் கூட்டம் இம்மாதம் 9ஆந்

www.tamilarangam.net

திகதி இடம்பெற்றிருக்கவேண்டும்.

ஆனல் பின் அமைதிக்குழு விரிவாக்கப்பட்டது. JVPஉட்பட சகல சிங்கள அரசியற் கட்சிகளும் குழுவினுள் கொண்டுவரப்பட்டன. முடிவுகள் ஏகமனதாக இருக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான விடயங்களும், ஏனைய விடயங்களும் அமைதிக் குழுவில் ஆராயப்படுமென அறிவிக்கப்பட்டது. குழு இவ்வாறு விரிவாக்கப் படாது இருந்திருப்பின் தமிழ்க் குழுக்கள தமக்கு இடையேயான பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பதற்கு அது சாதகமாக அமைந்திருக்கலாம். இப்போதுள்ள வடிவத்தில் இந்த அமைதிக்குழு பயனுடையதாக இருக்குமென நாம் கருதவில்லை. ஏனெனில் மாகாணசபை அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான சிங்கள அரசியற் கட்சிகளும் குழுவினுள் இருப்பதால் எந்த முடிவும் ஏகமனதாக இருக்காது.

ஏற்கனவே இயக்கங்களிடையே முரண்பாடுகள் உள்ளன. விடுதலைப் புலிகள்தவிர ஏனைய அமைப்புகள் ஒன்ருேடொன்று பேசியுள்ளன. TELO, ENDLFஉடன் இணைந்து நாம் தமிழ்த் தேசியசபையை உருவாக்கியுள்ளோம். கூட்டணி, முஸ்லீம் காங்கிரஸ், ஈரோசுடன் பேச்சு நடாத்தியது போலவே விடுதலைப் புலிகளுடன் பேச அமைதிக்குழு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், இப்போது அது சாத்தியமற்றுப் போய்விட்டது.

இந்நிலையில் இந்தியப் படைகள் விலகினல் இயக்க மோதல்கள் ஏற்பட்டு அநியாய உயிரிழப்புகள் ஏற்படும். இவ்வகையான மோதல்கள்



அநியாயமானவை; அவசியமற்றவை. இவ்வாருன நிலையை நாம் பேச்சு வார்த்தைகள் மூலம் தவிர்க்கலாம். ஏனைய தமிழ் அமைப்புகள் யாவும் இதற்கு தயாராக இருக்கின்றன. ஆனல், விடுதலைப் புலிகள் ஏனைய அமைப்புகளுடன் பேசத் தயாராயில்லை. இலங்கையரசுடன் பேசத் முடிந்த இவர்களால் ஏன் ஏனைய தமிழ் அமைப்புகளுடன் பேசமுடியாது?

இயக்க மோதல்களைத் தவிர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் மாகாண சபையைக் கலைக்க ஈழமக்கள் புரட்சிகர முன்னணி தயாராகவுள்ளது. ஆனல், மாகாணசபை கலைக்கப்படுமுன் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட வேண்டும். நாமெல்லாரும் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பேசத் தயாரா? தேர்தலுக்கு நாம் தயாரா என்பது பற்றித் தெரியவேண்டும். இல்லாதபட்சம் இந்தியப் படைவிலகல் நடந்தால் அவசியமற்ற இயக்க மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளது.

www.tamilarangam.net

சுவடுகள்:- நீங்கள் விடுதலைப் புலிகளுடன் பேச நேரடியாக முயன்றுள்ளீர்களா?

பதில்:- பலதடவைகள் கேட்டுள்ளோம். ஈழத்தில் அப்போது நின்ற சாந்தனை லண்டனுக்கு பாலசிங்கத்துடன் பேச அனுப்பினேம். ஆனல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் பேசத் தயாராக இருக்கவில்லை. இப்போது பேசுவதுபற்றி பிரபாகரனுடன் தாம் ஆலோசிக்க உள்ளதாக திலகர், யோகி ஆகியோர் கூறியுள்ளதாக பத்திரிகைச் செய்திகளால் அறியப்படுகிறது. இம்முயற்சி வெற்றியளித்தால் மிக மகிழ்ச்சி அடைவோம். எம்மோடு மட்டுமல்ல பேசத் தயாராகவுள்ள எல்லா அமைப்புகளுடனும் பேச வேண்டும். அப்படிப் பேச முன்வந்தால் எமது போராட்டத் திசைகூட சரியான வழியில் இட்டுச் செல்லப்படலாம்.

சுவடுகள்:- இந்தியப் படை விலகினுல், தற்போது இந்திய எதிர்ப்பு வாதத்தை தனது கோசமாக முன்வைக்கும் JVPயின் நிலை எப்படி மாறும்?

பதில்:- உண்மையில் இந்திய எதிர்ப்புவாதம் எனும் கோசம் தமிழின எதிர்ப்பு வாதமே. ஏனெனில் JVP உறுப்பினர்கள் வளர்க்கப்படும் விதம் ஒரு சோசலிசப் புரட்சிக்கான விதமல்ல. இந்திய எதிர்ப்பு வாதம் போல் பயன்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்த சுலோகம் தமிழின எதிர்ப்பு வாதமாகத் தான் இருக்கும். எனவே சிங்கள மக்களிடம் செல்வாக்குப் பெறுவதற்காக JVP அதை பயன்படுத்தலாம்.

சுவடுகள்:- இந்நிலை, இலங்கை அரசு மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கினுற்கூட அரசு ஒழுங்காக இயங்குவதைச் சிரமப்படுத்தலாம் அல்லவா?

பதில்:- இதுவரை 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களே வழங்கப் படவில்லை. 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கலையும், மேலதிக உரிமைக்கான பேச்சு வார்த்தைகளையும் நாம் வற்புறுத்துகிறேம். வேறு குழுக்கள் ஆயுதத்தை வைததிருக்கும்வரை எந்த அரசுக்கும் இவ்வாருன சிக்கல்கள் இயல்பானதே.

சுவடுகள்:- விடுதலைப் புலிகள் இந்தியாவுடன் பேச்சு நடாத்தும் பட்சத்தில் 87ஆடி ஒப்பந்தம்போல இடைக்கால அரசு எற்பட்டு அதில் குழுக்கள் சமனற்ற விகிதத்தில் பிரதிநிதித்துவப் படுத்தப்படுமா?

பதில்:- இவ்வாருன பேச்சு நடக்குமா என்பது பற்றி எமக்குத் தெரியாது. ஆனுல் பாலசிங்கத்தின் பேட்டிகளில் 'இந்தியா எங்களிடம் வரும்' என்று கூறப்படுகிறது. நாம் முன்பு வலியுறுத்தியதும், இனி வலியுறுத்துவதும் சம பிரதிநிதித்துவமே. அது வழங்கப்படாத நிலையில் குழுக்களுக்கிடையே பிழையான புரிந்துணர்வு ஏற்படச் சாத்தியமுண்டு. மாகாணசபை கூடக் கலைக்கப்படலாம். ஆனுல் தேர்தல் சரியாக நடாத்தப்பட வேண்டும். எந்தக் குழுவிடமும் ஆயுதமிருக்கவேண்டிய அவசியமில்லை.

சுவடுகள்:- எல்லாக் குழுக்களும் ஆயுதங்களைக் கீழேபோடும் என நம்புகின்றீர்களா?

பதில்:- ஜனநாயக வழிமுறையை ஏற்றுக்கொண்டால் நிச்சயம் அவ்வாறு செய்ய வேண்டும். அதுவே சரியான வழியாக இருக்கமுடியும்.

www.tamilarangam.net

சுவடுகள்:- 87 ஒப்பந்தத்தின் பின்பு 'ஆயுதக் கையளிப்பு' நிகழ்ந்தது. பிறகும் எல்லோரிடமும் ஆயுதங்கள் இருந்தன. படுகொலைகளும் நடக்கின்றன. இந்நிலை தொடருமா?

பதில்:- எல்லோருடைய ஒத்துழைப்பிலும் தான் அமைதி தங்கியுள்ளது.

சுவடுகள்:- சிங்கள அரசு முன்பு நடாத்திய படுகொலைகளை விட தற்போது மரணவீதம் அதிகமாகவுள்ளது. இந்தியப்படை விலகினுல் இந்நிலை இன்னும் கூடும் என்று பொதுவாக அஞ்சப்படுகிறதே?

பதில்:- ஒரு அமைப்பில் இருப்பவன் என்ற ரீதியில் எதிர்காலம் அவ்வளவு இருள் சூழ்ந்ததாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சரியான முடிவொன்று ஏற்பட வேண்டும் என்றே நாம் விரும்புகின்ருேம்.

சுவடுகள்:- மாகாணசபை அரசு என்ற ரீதியில் இதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

பதில்:- அதிகபட்சம் எங்களால் மாகாண சபையைக் கலைக்க முடியும். அல்லது வேறு வழிகள் இருந்தால் அதுபற்றிப் பேசவேண்டும். அவ்வாருன ஒரு சந்தர்ப்பத்தையே நாம் வலியுறுத்துகிருேம். தமிழ்த் தேசிய சபையிலுள்ள அமைப்புகளுடனும் ஈரோசுடனும் பலதடவைகள் பேசியிருக்கிருேம். விடுதலைப் புலிகள் ஏனைய அமைப்புகளுடன் பேச ஆயத்தமாஞல் பல சிக்கல்கள் தீர உதவியாயிருக்கும். அரசு என்று கூறுவதைவிட அரசியல் சக்திகள் என்ற ரீதியில் எல்லோருக்கும் ஒரு கடமையுள்ளது. அந்த அடிப்படையில் ஐக்கியம் நோக்கி அனைவரும் செயற்பட வேண்டும்.

> உலகெங்கும் வாழும் மக்களுக்கெல்லாம் தாய்நாடு என்று ஒன்றுண்டு. ஆனுல் நோர்வே மக்களுக்குத் 'தாய்நாடு' கிடையாது. ஏனெனில் அவர்கள் நோர்வேயைத் தந்தையர் நாடு என்றே அழைக்கிருர்கள்.
>
> காசி.

சுவடுகள்:- ஒன்றுடன் ஒன்று பேசக்கூடிய அமைப்புகளிடையே கூட நூற்றுக் கணக்கில் படுகொலைகள் நடக்கின்றனவே?

பதில்:- (சாந்தன்) எல்லாத் தரப்பிலும் பிழைகள் நிகழ்ந்துள்ளன, பிரச்சனைகள் உள்ளன. இப்போது அவ்வாருன பிரச்சனைகள் குறைந்து கொண்டு வருகின்றன. நீங்கள் முன்பு குறிப்பிட்டது போல சிறீலங்கா அரசு காலங்களைவிட, தற்போதைய நிலை மோசமானதல்ல. நல்ல சூழல் இல்லாவிடினும், நல்ல மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன.

சுவடுகள்:- நாம் குறிப்பிட்டது இயக்கங்களுக்கு இடையிலான இழப்புகள் பற்றியது. இயக்க அழிப்பு வேளைகள்தவிர நிகழ்ந்த படுகொலைகளைவிட தற்போது கூடியுள்ளன என்பது முக்கியமானது.

பதில்:- விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடும், ஏனைய இயக்கங்களுக்கு இடையேயுள்ள முரண்பாடும் அடிப்படையில் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும்

www.tamilarangam.net

வேறுபட்டவை. 75% ஆன அளவு, படுகொலைகளை நிறுத்துவது பற்றி முன்னேற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. இவை முற்ருக நிறுத்தப்படலாம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

படுகொலைகள் நிகழ்ந்தால் அதுபற்றி யாருடனுவது (விடுதலைப் புலிகள்தவிர) பேசுவது தற்போது சாத்தியம். இது ஒரு முக்கிய திருப்பம்.

சுவடுகள்:- 86காலப் பகுதியில் மக்களுக்கு ஓரளவாவது கருத்துச் சுதந்திரம் இருந்தது. ஆனுல், இன்று எமக்குக் கிடைக்கும் செய்திகள் மக்கள் வாய் திறக்க முடியாத சூழலையே அறிவிக்கின்றன. இதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

பதில்:- ஆரம்பத்திலிருந்தே (TELO, PLOT, EPRLF தடை செய்யப்பட்ட காலங்களில் இருந்தே) விடுதலைப் புலிகளைப்பற்றி விமர்சிப்பவர்கள் துன்புறுத்தப் பட்டுள்ளனர். 86 டிசம்பரின் பின் விடுதலைப் புலிகளின் புகழ்பாடும் நிலையும், எதிராக செயற்படுவோர் கொல்லப்படும் நிலையும் இருந்தது. மாகாண சபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் நடந்த பின்பும் விடுதலைப் புலிகள் தொடர்பான விமர்சனங்களையோ கண்டனங்களையோ முன்வைப்பது அரசியல் நிறுவனங்களே (முக்கியமாக EPRLF, TELO, ENDLF) தவிர மக்களோ, புத்திஜீவிகளோ அல்லர். எமது அமைப்புப் பற்றி தாராளமாக விமர்சிக்கலாம். அவ்வாறு விமர்சிப்பவர் பாதிக்கப்பட்டால் எமது அலுவலகத்தில் முறையிடலாம். சுவடுகளிலும் ஈ.பி. என்று சொன்னுல் அடியும், அபராதமும் என எழுதினீர்கள். இவ்வாருன ஒரு சம்பவம் பற்றி எனக்குக் கூறினுல் நான் விசாரிக்கலாம்.

மக்கள் வாய் திறக்க முடியாத சூழலென்ருல் அதற்கு யார் காரணம் என்று பார்க்க வேண்டும். விமர்சனம் மூலமே நாம் திருந்த முடியும் என நம்புகிறோம்.

சுவடுகள்:- முன்னணியில் உள்ளவர்க்கு கருத்துத் தெளிவு இருக்கலாம். ஆனுல், கீழ்மட்டப் போராளிகளால் ஏனைய அமைப்பினரோ மக்களோ கொல்லப்படும் நிலை உண்டல்லவா? எமது சமூகத்துக்கு மிக அவசியமான மருத்துவபீட விரிவுரையாளர் ராஜினிகூட அண்மையில் கொல்லப்பட்டுள்ளார்.

பதில்(சாந்தன்):- கருத்துச் சுதந்திரம் தொடர்பாக முன்பிருந்த பிடியை தளர்த்த பெருமளவு முயன்றுவருகிறோம். எமது தோழர்கள் 200க்கும் மேற்பட்டோர் பலியானதும் இந்தப் போராட்டத்தின் ஒரு அம்சமே.

சுவடுகள்:- மாகாண அரசு கலைக்கப்பட்டால் அதன்பின் மாகாண அரசு ஊழியர்கள் நிறுத்தப்பட நேருமா? மக்கள் தொண்டர் படையின் நிலை என்னவாகும்?

பதில்:- மாகாண அரசு கலைக்கப்படலாம், அதற்காக சபையால் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் பதவியிழக்க வேண்டும் என்றில்லை.

மக்கள் தொண்டர் படை இலங்கையரசின் வர்த்தமானியில் விளம்பரம் இடப்பட்டு சேர்க்கப்பட்டவர்கள். இது வடக்கு- கிழக்கில் சட்டத்தை ஒழுங்காக்க உருவாக்கப்பட்ட துறை. இந்த 2000

www.tamilarangam.net

இளைஞர்கள் பொதுவாக வறியவர்கள். எனவே இதைக் கலைப்பதானால் அவர்களது எதிர்காலம் பற்றியும் சிந்திக்கவேண்டும். தற்போது இலங்கை முழுவதும் ஐநூறுக்கு உட்பட்ட தமிழ்ப் பொலிசாரே உள்ளனர்.

சுவடுகள்:- இந்த ஆட்சேர்ப்பு பலவந்தமாக நிகழ்த்தப்பட்டதாகவும், சித்திரவதைகள் நிகழ்வதாகவும் மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளதே?

பதில்:- குற்றம் சாட்டப்படும் ஆட்சேர்ப்பு நிகழ்த்தப்பட்டது மக்கள் தொண்டர் படைக்கானதல்ல. அதுவேறு. மன்னிப்புச் சபையினர் எமக்கு இது பற்றி எழுதியபோது அவர்களை எமது முகாம்களை வந்து பார்வையிட அழைத்தோம். அவர்களுக்கு இலங்கையரசு அனுமதிதர மறுத்தது. செஞ்சிலுவைச் சங்கத்தையும் எமது முகாங்களை வந்து பார்வையிட அழைத்தோம். முன்னர் யாழ்ப்பாணத்தில் 17பேர் கொண்ட பெற்றோர், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்களை உள்ளடக்கிய குழு எமது முகாங்களைப் பார்வையிட்டு முகாங்களில் இருந்தோரைச் சந்தித்துப் பேசியபோது, அவர்களிடம் முகாங்களில் இருந்தவர்கள் தமது சொந்த விருப்புடனேயே அங்கிருப்பதாகக் கூறினர்.

ஆட்சேர்ப்பு முறைகளில் ஆரம்பத்தில் தவறுகள் நிகழ்ந்தது உண்மை. சகல பத்திரிகையாளர்களுக்கும் இதுபற்றித் தெளிவாக்கி யுள்ளோம். ஆரம்பத்தில் ஆட்சேர்ப்புக்கு எதிரான பிரச்சாரம் இலங்கை அரசாலும் விடுதலைப் புலிகளாலும் மேற் கொள்ளப்பட்டது. இலங்கையரசு இளைஞர்களைக் கொண்டு செல்ல விசேட விமானங்களை வடக்கே அனுப்பியது; பிரிட்டிஸ் தூதரகம் எல்லோருக்கும் விசா வழங்குவதாகப் போலி அறிக்கை வெளியிட்டது. தமிழ் இளைஞர்கள் தங்கத் திறக்கப்பட்ட அகதி முகாங்களில் கடமையாற்றிய இளைஞர்கள் விடுதலைப் புலிகளே. இச்செயல்கள் அனைத்தும் எமக்கெதிரான திட்டமிடப்பட்ட பிரச்சாரத்துக்காகவே நடாத்தப்பட்டன.

"மேரா நாம் டில்லிவாலா"

".......அவர்கள் (CVF எனப்படும் மாகாணசபைத் தொண்டர்கள்) இந்திய ஜவான்களைப் போலவே அணிவகுத்துச் செல்கிறார்கள். இந்திய ஜவான்களைப் போல் 'மரியாதை' (Salute) செய்கிறார்கள். இந்தியில் உத்தரவு பெற்றுச் செயல்படுகிறார்கள். அவர்களிடம் இந்திய ஜவான்களிடம் காணப்படும் ஒழுக்கத்தையும்(?) கட்டுப்பாட்டினையும்(?) காணக்கூடியதாயுள்ளது."

Front Line,
November11-24,
தீபன்

சுவடுகள்:- அவ்வாறான ஆட்சேர்ப்பு எதற்காக நிகழ்த்தப்பட்டது?

பதில்:- ஆடி 29க்குமுன் இந்தியா வெளியேற வேண்டும் என்று இலங்கை அரசு கோரியபோது, அவ்வாறு படைவிலகு முன்னர் வடக்கு கிழக்குக்கான

www.tamilarangam.net

பொலிஸ்படை உருவாக்கப்பட வேண்டும் என நாம் கோரினோம். பதிலுக்கு இலங்கையரசு இப்பகுதிகளில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இராணுவம் அனுப்பப்படும் என்று கூறியிருந்தது. சிங்கள இளைஞர்களையே இன்று நூற்றுக்கணக்கில் கொன்று குவிக்கும் இந்த இராணுவம், முன்பு வடக்கு கிழக்கில் நடந்து கொண்ட விதம் மீண்டும் ஏற்படக்கூடாதென வலியுறுத்திய நாம், அவ்வாறு இராணுவம் வந்தால் அதை வேறோர் இராணுவத் திரட்டால் சமாளிக்க நேரிடும் எனக் கூறினோம். இதற்கும் அரசு சரியாக பதிலளிக்கவில்லை. இந்தியப்படை விலகும் இடங்களில் பாதுகாப்பை இலங்கை இராணுவமா, எமது இராணுமா மேற்கொள்வது என்ற தெரிவில் நாம் பின்னையதைத் தெரிந்தெடுத்தோம். இக்காரணமே ஆட்சேர்ப்புக்கான காரணம். சிலரால் இது வேறுவிதமாகக் கூறப்பட்டது. இந்தியா விலகியபின் விடுதலைப் புலிகள் தாக்குவார்கள், அதற்கெதிரானதே இந்தப் படையென்று கூட. விடுதலைப் புலிகள் தாக்கினால் பலரும் இப் படையைவிட்டு ஓடலாம்.

எம்மைப் பொறுத்தவரை இலங்கையரசே எமது முதல் எதிரி. விடுதலைப் புலிகளல்ல. இலங்கை இராணுவம் மீண்டும் நுழைந்தால், முக்கியமாக கிழக்கில் திருகோணமலைப் பகுதியில் தற்போது போல மக்கள் அமைதியாக வாழும் நிலை இராது.

இந்த ஆட்சேர்ப்பு குறுகிய காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டதால் சில தவறுகள் நிகழ்ந்துள்ளன. இப்போது (ஒக்டோபர் 14) ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

சுவடுகள்:- எந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தப்பட்டது?

பதில்:- ஆரம்பத்தில் எமது தோழர்களால் பலர் கொண்டு செல்லப்பட்டு சேருமாறு கேட்கப்பட்டனர். இதுவே 5000 பேர்வரை கொண்டு வரப்படக் காரணம். பின், இது பிழையென்று புரிந்து, மக்களுக்கு இதுபற்றிப் புரியவைத்து இந்தப் படையில் சேர அழைக்கப்பட்டு வந்தனர். இல்லாத பட்சம் ஒரு வருடமாவது புனர் நிர்மாண வேலைகளில் ஈடுபடலாம். இவையிரண்டில் எந்த வழியையாவது தெரிவுசெய்யலாம் என்ற வகையிலேயே இரண்டாவது தடவை இளைஞர்கள் சேர்க்கப்பட்டனர். இதில் கிழக்கிலிருந்தே ஏறத்தாள 80%ஆனோர் சேர்ந்தனர்.

சுவடுகள்:- இவ்வாறு 5000 பேர் பிடித்துக் கொண்டு வரப்பட்டது ஜனநாயக விரோதமல்லவா?

பதில்:- அந்த முறை பிழை. இப்பிழையை பலஇடங்களில் பகிரங்கமாகக் கூறியுள்ளோம்.

சுவடுகள்:- இந்தியப்படை தற்சமயம் விலகினாலும் இந்தியாவின் தலையீடு வேறு விதங்களில் தொடர்ந்தும் இருக்குமா?

பதில்(கேதீஸ்வரன்):- இத் தலையீடு சாதகமாகவோ, பாதகமாகவோ இருப்பதைப் பொறுத்து நாம் எமது தந்திரோபாயங்களை மாற்றிக் கொள்வோம்.

சுவடுகள்:- 'ஈழப் பிரகடனம் செய்ய நேரிடும்' என்ற உங்கள் அமைப்பின் கூற்று, உண்மையாகவே சொல்லப்பட்டதா? இதை இந்தியா விரும்பியிருக்குமா?

பதில்:- இன்றும் ஈழப் பிரகடனம் செய்யும் நிலையையே இலங்கையரசு

www.tamilarangam.net

தோற்றுவிக்கும் என நாம் நம்புகிறோம். எமது மக்களின் நலனின் அடிப்படையில், இதியாவை முற்றுமுழுதாக எமது பிரச்சனைக்குள் ஈடுபடுத்துவதே எமது விருப்பம். இதற்கு சாதகமாகவே இலங்கையரசு தற்போது நடந்து கொள்கிறது.

சுவடுகள்:- டிசம்பர் 31க்கு முன் படைவிலகல் முற்றுப்பெற்று, மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்படாத நிலையில், இலங்கையரசு - விடுதலைப்புலிகள் ஒப்பந்தம் ஏற்பட்டால் மாகாண சபை கலைக்கப்படலாம் அல்லவா?

பதில்:- அதிகாரப் பரவலாக்கம்பற்றிய இலங்கையரசின் நிலைப்பாடு மாறுதது. அதிகாரப் பரவலை அரசு வழங்காது என்றே நம்புகிறோம்.

நாங்கள் அதிகாரப் பரவலை வலியுறுத்துவது இலங்கை அரசுக்கும், மாகாண அரசு மூலம் எம்மைப் பலமாக்குவோம் என்பது விடுதலைப் புலிகளுக்கும் பிரச்சனை. இதனுல் சபைக் கலைப்பை இருபகுதியினரும் விரும்பலாம். ஆனுல், அரசியல் அமைப்புச் சட்டம் இதற்கு அனுமதிக்காது.

யாருக்காவது தலையிடி என்பதற்காக நாம் சபையைக் கலைக்க மாட்டோம். ஒருமுறை கலைக்கப்பட்டால் மறுபடி கலைக்கச் சந்தர்ப்பமுண்டு. காத்திரமான தீர்வொன்று ஏற்படும் பட்சத்தில் நாங்களே சபையைக் கலைக்க அரசுக்கு சிபார்சு செய்யக்கூடும். மாகாண அரசுக்கான அதிகாரங்களைக் காப்பாற்றவே நாம் போராடுகிறோம். இதை விடுதலைப் புலிகள் விளங்கிக் கொள்ளவில்லை.

சுவடுகள்:- பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் உறுப்பினர்கள் இணைந்து செயற்பட முடியுமா?

இதே இதழில் வெளியிடுவதற்காக ஒரு பேட்டி தருமாறு இங்குள்ள விடுதலைப் புலிகளிடம் கேட்டிருந்தோம். அவர்கள் தமக்கு நேரமில்லை எனக் கூறியதால் அவர்களின் பேட்டியை வெளியிட முடியவில்லை.

சுவடுகள்.

பதில்:- பாராளுமன்றத்தில் பெரிதாக எதையும் சாதிக்கமுடியாது. இலங்கையரசை அம்பலப்படுத்தவும், மாகாண அரசுபற்றிப் பேசவும் அது ஒரு தளமாக அமையலாம். அங்கே இணைந்து பணியாற்றச் சாத்தியமுண்டு.

சுவடுகள்:- தற்போதைய பேச்சுக்களின் முடிவில் விடுதலைப் புலிகள், தற்போது நீங்கள் வைக்கும் கோரிக்கைகளை விட அதிகமாகப் பெற்றுத் தரமுடியும் என நம்புகின்றீர்களா?

பதில்:- மூன்று மாத காலமாக நடக்கும் பேச்சுக்களில் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாதுள்ளது. கூடுதலாக எதையாவது பெறுவதாயின் இலங்கை அரசு அதற்கு சம்மதிக்க வேண்டும். அரசு அதற்கு ஆயத்தமாக இராது. இது இரு பகுதியினதும் (அரசு- புலிகள்) குறுகியகால தப்பிப் பிழைத்தலுக்கான அணுகுமுறையே.

சுவடுகள்:- முஸ்லீம் மக்கள் தாம் மேலும் ஒடுக்கப்படலாம் என்று குரல் எழுப்பியுள்ளது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- வட- கிழக்கு மாகாணசபையில், முஸ்லீம் மக்களுக்கான அதிகார வடிவமொன்று அமைக்கவேண்டும் எனற தீர்மானமொன்று ஏகமனதாக

www.tamilarangam.net

நிறைவேறியுள்ளது. எனவே அந்த அச்சம் தேவையற்றது.

சுவடுகள்:- முஸ்லீம் மக்களது பாதுகாப்புப் பிரச்சனைகள் தொடர்பாக என்ன கூறுகின்றீர்கள்?

பதில்:- மாகாண சபையின் முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர் கொல்லப்பட்டது உட்பட சில சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இது தொடர்பாக ஏனைய குழுக்களுடன் கலந்தாலோசித்து ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தினோம். எமது அமைப்பு தனது பாதுகாப்புக்காக வைத்திருந்த ஆயுதங்களில் சிலவற்றை, இலங்கையரசின் எதிர்ப்பு இருந்தும் அவர்களது பாதுகாப்புக்காக வழங்கினோம்.

சுவடுகள்:- இறுதியாக சுவடுகள் வாசகர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?


பதில்:- ஒன்று, பல வெளிநாடுகளால் வடக்கு- கிழக்குக்கென பெருமளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை இலங்கையரசால், எமது மாகாணசபை அரசிடம் வழங்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புனர் நிர்மாணத்துக்கென அடுத்த மூன்று வருடங்களில் செலவிட 57கோடி டொலர் வழங்கப்பட்டும் மூன்றில் ஒருபகுதிகூட எம்மை வந்தடையவில்லை. உதவியளிக்கும் நாடுகள் இலங்கையரசை வலியுறுத்தி இப்பணம் எம்மை வந்தடையச் செய்யலாம்.

மற்றையது எமது மக்களில் பலர் வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு பொருளாதார உதவி வழங்குகின்றனர். அவ்வாறு செய்பவர்கள் இலங்கை அரசுடன் பேசும் விடுதலைப் புலிகள் ஏனைய தமிழ்க் குழுக்களுடனும் பேசவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

இவை இரண்டையும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் செய்ய வேண்டும் என்பதே எமது விருப்பம்.

## சுவடுகள் சந்தா விகிதம்

| | |
|---|---|
| நோர்வே, சுவீடன், டென்மார்க் | 300 NKR |
| ஐரோப்பிய நாடுகள் | 400 NKR |
| ஏனைய நாடுகள் | 500 NKR |
| வங்கிக் கணக்கிலக்கம் | 160752 15062 |



சுவடுகள் விளம்பர விகிதம்

| | |
|---|---|
| உள் அட்டை | 350 NKR |
| முழுப் பக்கம் | 250 NKR |
| அரைப் பக்கம் | 150 NKR |
| பின் அட்டை | 400 NKR |

தொடர்புகட்கு: SUVADUHAL
Herslebs Gate 43
0578, Oslo 5
NORWAY

வங்கி மூலமாக மாத்திரமே பணத்தைச் செலுத்தி உதவவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அன்புள்ள லோகநாதா,

உனது கடிதம் கிடைத்தது. நான் நோர்வீஜிய ரீ.வி.யில் தவறவிட்ட Peter Brooks இன் 'மகாபாரதத்' தொடரை சுவீடன் ரீ.வி.யில் பார்த்தேன். நீ குறிப்பிட்டது போல் அது ஒரு அற்புதமான அரங்கப் படைப்புத்தான்.

உனக்கு ஒரு நல்ல சேதி. நாம் வெகுநாட்களாக எதிர்பார்த்திருந்த Salam Bombay இப்போது ஒஸ்லோவில் திரையிடப்பட்டுள்ளது. நான், காரின் & விக்டர் தம்பதிகளுடன் சென்ற புதன்கிழமை பார்த்தேன். முப்பது முப்பத்தைந்து ஆசனங்களைக் கொண்ட Saga- 5 என்ற குட்டித் தியேட்டரில் அது திரையிடப்பட்டிருப்பதால்- மூன்று நாட்கள் தொடர்ந்து முயற்சித்த பின்பே எங்களுக்கு ரிக்கற் கிடைத்தது.

நெறியாளர் மீரா நாயருக்கு இதுதான் முதற் படமாம். நம்ப முடியவில்லை! உலகின் நான்காவது பெரிய ராணுவம், எட்டாவது பெரிய கடற்படை சகிதம் அண்டை நாடுகளை அச்சுறுத்தும்- இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் "எதிர்கால வல்லரசு" இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையின் அவலத்தையும், வறுமையையும், சீரழிவையும் இரண்டு மணித்தியாலங்களில் முடிந்தவரை காட்டியுள்ளார்.

கலைப்படம் (art film)தானே என்று கமராவை அரைக்கம்பத்தில் கட்டிவிடாமல்- கமராவை சுறுசுறுப்பாக இயக்கியிருக்கிறார் Sandi Sissel. இயக்குநர் மீரா நாயருடன் இணைந்து Sooni Traporewella எழுதியிருந்த திரைக்கதை(Script)யும் இப்படத்தின் வெற்றிக்குத் துணைபோயுள்ளது. சிறுநீர் கழிப்பதற்காக ரயிலை மறிக்கும் சிறுவன், திருடிய பணத்தில் குதிரைவண்டிச் சவாரி செய்யும் சிறுவர்கள் அவர்கள் பேசும் அரைகுறை ஆங்கிலம்- என்று படம் முழுவதும் சிரிக்கவைக்கும் துயரங்கள். "கிளுகிளுப்பு", "திகில்" எதுவுமின்றி வெறுமனே ஒரு சமூகத்தின் அலங்கோல வாழ்வின் சோகத்தை சலிப்படைய வைக்காது காட்டியிருக்கிறார்கள் என்றால் அது ஒரு சாதனைதானே!

"ஐநூறு ரூபா இல்லாமல் வீட்டில் கால்வைக்காதே" என்று தாயினால் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட கிருஸ்ணா (SHAFIR SAYED) என்ற பத்து வயதுச் சிறுவனைப் பின்தொடர்கிறது கமரா. ஐநூறு ரூபாய் உழைப்பதனை ஒரு



www.tamilarangam.net

சவாலாக ஏற்று ஓர் சேர்க்கஸ் குழுவில் எடுபிடி வேலையாளாக சேர்ந்த கிருஸ்ணுவை சேர்க்கஸ் குழு தந்திரமாய்க் "கழட்டிவிட்டு"ச் செல்ல, வேறுவழியின்றிக் கையிலிருந்த பணத்திற்கு பம்பாய்க்கு ரயில் ரிக்கற் வாங்கி, பம்பாய் வருகிருன். அவனைப் போன்ற பல சிறுவர்களுடன் பம்பாய் நகரத்தின் தெருக்களில் அவன் வாழ்க்கை ஆரம்பமாகிறது. இங்கே துர்நாற்றம் வீசும் சாக்கடை, காதைக்கிழிக்கும் வாகனங்களின் இரைச்சல், சினிமா, விபச்சாரம், போதைவஸ்து, போலீஸ், குற்றச்செயல்கள் என்பன அவனின் உலகமாகிப் போய்விடுகிறது. எப்படியாவது ஐநூறு ரூபாய் உழைத்து, ஊர் செல்லவேண்டும் என்ற தீர்மானத்தில் ஒரு தேனீர்ப் பெட்டிக்கடையில் வீடுவீடாக தேனீர் வினியோகிக்கும் வேலையில் அமர்கிருன் கிருஸ்ணு. இந்த உலகத்தில் 'கிருஸ்ணு' என்ற அவனது பெயர் பறிக்கப்பட்டு 'சாய்பாபு' எனப் பெயர் சூட்டப்படுகிருன். ஹிந்தியில் சாய் என்ருல் தேனீர் என்று அர்த்தமாம். ஆனுல் வெறும் ஐநூறு மட்டுமே கிருஸ்ணுவின் வாழ்க்கையாகிப் போய்விடவில்லை. சினேகிதங்க், உறவுகள் என்று மனிதநேயம் அவனையும் சுற்றி வளைத்துக் கொள்கின்றது. போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டு ஈற்றில் போதைவஸ்திஞலேயே பரிதாபமாக மாண்டு போகும் கிருஸ்ணுவின் நெருங்கிய நண்பன் சில் (RAGHUBIR YADEV), "விபச்சாரத்திற்குப் போனுய் சரி, ஆனுல் ஏன் நம் மகளைக் கூட்டிச் சென்ருய்!" என்று மனைவி மீது கோபப்படும்(?) சிலுமின் முதலாளி பாபா(Nana patekar), கிருஸ்ணுமீது பரிவும் பாசமும் கொண்ட



மனைவி ரேகா(Anita kapoor) கிருஸ்ணுமீது infatuation கொண்ட பாபா ரேகா தம்பதிகளின் எட்டு வயது மகள் மஞ்சு, கிருஸ்ணுவின் நேசத்துக்குரியவளும், விபச்சார விடுதியில் வந்தவளுமாகிய நேபாளத்துப் பெண் சுலோசல், சினிமா நடிகையின் படத்தை 'என் இதய ராணி' என்று முத்தமிடும் கிருஸ்ணுவின் வயதையொத்த சிறுவன் என்று இவர்களிடையே இழையோடும் கிருஸ்ணுவின் வாழ்வு திடீரென தடம் மாற ஆரம்பிக்கிறது.

கிருஸ்ணுவும் மஞ்சுவும் பொலிசாரிஞல் கைது செய்யப் பட்டு சிறுவர் நன்நடத்தை முகாமுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றனர். விபச்சாரம் செய்யும் தாயுடன் மஞ்சுவை அனுப்ப முடியாது என்று நன் நடத்தை முகாம் அதிகாரிகள் கூறிவிட "இந்த உலகத்தில் எனக்கென்றிருந்த ஒரே மகளையும் இழந்து விட்டேன்." என்று உடைந்து போன ரேகா வீட்டைவிட்டு வெளியேற முயலும் போது -அவளை பாபா தடுக்க முயல, அச்சமயம் நன்நடத்தை முகாமிலிருந்து தப்பிவந்த கிருஸ்ணு,

www.tamilarangam.net



பாபாவை கொலை செய்ய நேரிடுகிறது. ரேகாவை காப்பாற்ற நினைத்த கிருஸ்ணு வீதியில் விழாக் கூட்டத்தில் அவளையும் தவறவிட்டு - தளர்ந்துபோய் ஒரு வீட்டின் திண்ணையில் சற்று அமைதியாய் இருந்து ஒரு முறை பம்பரத்தை சுழற்றிவிட்டு - திடீரெனத் தன் வாழ்வை நினைத்து, தன் எதிர்காலத்தை நினைத்து, போகமுடியாமல் போய்விட்ட தன் ஊரை நினைத்து, சேர்க்க முடியாமல் போய்விட்ட ஐநூறு ரூபாயை நினைத்து - விம்மி அழுகிறான். படம் முடிகிறது.

அழுது கொண்டிருந்த காரினைச் சமாதானப்படுத்துவதே விக்டருக்கு வேலையாகிப் போய்விட்டது. ஒருபாவமும் அறியாத ஒரு பிஞ்சுச் சிறுவனின் வாழ்க்கை அந்தச் சமுதாயத்தில் எவ்வாறு நாசமாக்கப்படுகிறது என்பதை நெறியாளர் அழகாகக் காட்டியுள்ளார். எல்லாவற்றுக்கும் ஒரு முடிவைக் காட்டியாக வேண்டும் என்று நினைத்து, படம் முடியும் போது கிருஸ்ணுவின் கையில் சிவப்பாக எதையும் கொடுக்க வில்லை- சிவந்த வானத்தைக் காட்டவும் இல்லை. முடிவ பார்வையாளர்களிடம் தான். அந்தச் சமூகத்தில் அவதியுறும் கிருஸ்ணு, ரேகா, மஞ்சு போன்ற மனிதர்களின் பரிதாபத்தையும் அவர்களின் பரிதாப நிலைக்கு காரணமான இந்தச் சமூக அமைப்பின் மீது ஆத்திரத்தையும் நெறியாளர் பார்வையாளரிடையே ஏற்படுத்தியிருக்கிறார். இந்தப் படத்திற்கு Cannes திரைப்பட விழாவில் 88ல் Camera d'or விருது கிடைத்தது நினைவிருக்கலாம்.

இந்தப் படத்தின் இசை அமைப்பாளர் யார் தெரியுமா? 'ஏழாவது மனிதன்' படத்துக்கு பாரதி பாடல்களை இசை அமைத்த எல்.வைத்தியநாதனின் தம்பி எல்.சுப்பிரமணியம் தான். 1987ல் என்று நினைக்கிறேன், இவரின் வயலின் concert ஒன்று நோர்வேஜிய ரீவியில் இடம்பெற்றது உனக்கு நினைவுண்டா?

வேறு என்ன புதினம்? நல்ல படம் என்று நீ ஏதாவது கடைசியாய் பார்த்தாயா? நேரமுள்ளபோது எழுது.

அன்புடன்,

வேல். சிவானந்தன்

www.tamilarangam.net

# இங்கு நிகழ்ந்தது




* ஒக்ரோபர் 15ம், 16ம் திகதிகளில் ஸ்தவங்கர் மாநகர சபையின் ஆதரவில் இரண்டாவது தடவையாக தமயந்தியின் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.
நூற்றுக்கு மேற்பட்ட புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் பெரும்பாலான புகைப்படங்கள் ஈழச் சூழலையும் ஏனையவை இந்திய, நோர்வேஜியச் சூழலையும் பிரதிபலித்தன. கண்காட்சியில் வைக்கப்பட்ட புகைப்படங்கள் விற்பனைக்கு விடப்பட்டுக் கிடைத்த பணத்தில் ஒரு பகுதி மூன்றும் உலக நாடுகளின் பெண்களுக்கான நிதியத்துக்கு வழங்கப்பட்டது.
கண்காட்சியில் வைக்கப்பட்ட 60 புகைப்படங்கள் 20ம் திகதியன்று பேர்கனுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது கொள்ளையிடப்பட்டன.

* பேர்கனில் ஒக்ரோபர் ஆரும் திகதி நிகழ்ந்த தமிழ் கலாசார நிகழ்ச்சியில் ஈழதேசப் பாரம்பரியக் கலைகளில் ஒன்ருன தென்மோடி நாட்டுக் கூத்தும் இடம்பெற்றது.

காலஞ்சென்ற அண்ணவி 'கலைக்குரிசில்' நீ. வ. அந்தோனி அவர்களால் எழுதப்பட்ட ஆகமக் கதையான 'தாவீது – கோலியாத்' நாடகத்தை மெலிஞ்சிமுனை கலைக்குரிசில் நாடக மன்றத்தின் இளைய தலைமுறையினர் இங்கு மேடையேற்றினர். இது இந்த நாடகத்தின் இரண்டாவது மேடையேற்றமாகும்.

● சர்வதேச அமைதி ஆய்வு நிலையம்(ஒஸ்லோ) ஒக்ரோபர் 16ம் திகதி 'இலங்கை அரசியல் வன்முறை' என்ற தலைப்பில் ஆய்வரங்கு ஒன்றை நடாத்தியது. நிலையத்தின், இன முரண்பாடுகள் பற்றிய பிரிவுத் தலைவராக இருக்கும் கலாநிதி குமார் ரூபசிங்க தலைமையில் நடந்த கருத்தரங்கில் திரு. நெவில் ஜயவீர (முன்னாள் யாழ் அரச அதிபர்), லக்சிறி பெர்ணன்டோ (உலக பல்கலைக்கழக சேவை, ஜெனீவா), ராஜநாயகம் (தமிழ் ரைம்ஸ் ஆசிரியர்), சந்திரிகா குமாரதுங்க (காலம் சென்ற நடிகர் விஜய குமாரதுங்கவின் மனைவி), ராமானுஜம் மாணிக்கம் (இலங்கைச் செய்திச் சேவை, நியுயோர்க்), கலாநிதி சச்சிதானந்தம் (தமிழர் ஒற்றுமை அமைப்பு லண்டன்), ஆகியோர் கலந்து கொண்டனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் கலந்து கொள்ளவிருந்த பேச்சாளர் கேதீஸ்வரன் முதல் நாள் கிறிங்சோவில் தாக்கப்பட்டிருந்தமையால் அவருக்குப் பதிலாக லண்டனில் இருந்து வந்திருந்த சாந்தன் கலந்துகொண்டார்.

● நேசோட்டன் எனுமிடத்தில் அகதிகள் தங்குமனை ஒன்றில் தமிழ்ச் சிறுவர்களுக்கும், சோமாலிய நாட்டவருக்கும் இடையை மோதல் ஒன்று நிகழ்ந்துள்ளது. நிறவாத எதிர்ப்பு அமைப்பினர் தலையிட்டமையின் பின்னர் நிலமை சுமுகமாக்கப்பட்டது. சோமாலிய அகதி ஒருவர் இச்சம்பவத்தில் காயமுற்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உணவுப் பொருட்களை மலிவான விலையில் நீங்கள் பெறவேண்டுமானால் எங்களிடம் வாருங்கள்.

# CEYLON MAT A.S

21, DRONNINGSGATA, 0152.OSLO.1. T.P:332619

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் நோர்வேயின் எப்பகுதிக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றைய TOYEN KRO
இன்றைய DARBAR

அன்றும் அதே சுவை
இன்றும் அதே சுவை

# INDISK & VEGETAR MAT

## DARBAR

**MAT OG VINHUS**

**INDISK MAT PÅ DET BESTE**
**SPENNENDE VEGETAR-RETTER**
**TANDOORI RETTER**
**PIZZA**

## Rimelige priser
## TILBUD!

Man - Lør (til kl. 19.00)
HAPPY HOUR RIMELIGE DRIKKER.-
**Indisk middag Kr.** KR 59,-

.Sø. (til kl. 19.00)
**Indisk buffet KUN Kr. 89.-**

**Åpent alle dager kl. 14.00 - 23.00**
Smedgt. 49, (Ing. Jens Bjelkesgt.) Oslo 6
(3 Min. gange fra Toyen T-banest.)
Tlf. 67 47 04
**GOD PARKERING ● TAKE AWAY**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்